வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk    மலர் : 04    24.04.2023 திங்கட்கிழமை    இதழ் : 136    பக்கங்கள் : 16

## 6 சுயாதீன ஆணைகுழுக்களுக்கு விரைவில் புதிய உறுப்பினர்கள்!

கொழும்பு, ஏப். 24

இதுவரை நியமிக்கப்படாத ஏழு சுயாதீன ஆணைக்குழுக்களில் ஆறு ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் எதிர்வரும் வாரத்தில் அரசமைப்பு பேரவையால் நியமிக்கப்படவுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைமுறைகள் நிறைவடையும் வரை சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15

## நெடுந்தீவு ஐவர் படுகொலை:
# பணம், நகைக்காகவே கொன்றேன் கொலை சந்தேகநபர் வாக்குமூலம்!

யாழ்ப்பாணம், ஏப். 24

முதியவர்களிடம் இருந்த நகைகள், பணத்தை கொள்ளையிடவே அவர்களை தான் கொலை செய்ததாக சந்தேகநபர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார். அந்த நகை, பணத்தை வைத்து மீண்டும் தான் வெளிநாடு செல்ல முயன்றதாகவும் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் நேற்று முன்தினம் ஐந்து முதியவர்கள் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைகளை செய்துவிட்டு தப்பித்து புங்குடுதீவில் மறைந்திருந்தார் என்று கூறப்படும்

15

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மாற்றங்கள்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ உறுதி



கொழும்பு, ஏப். 24

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்ற திருத்தங்கள் மற்றும் மாற்றங்களுக்கு உட்பட்டது. எனவே, அந்தச் சட்டம் குறித்து எவரும் அச்சம் கொள்ள வேண்டாம் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் வரைவிலுள்ள விதிகள் குறித்து சர்வதேச மற்றும் உள்ளூர் சமூகங்கள் எழுப்பியுள்ள கவலைகள் குறித்து அரசாங்கம் அறிந்துள்ளது. விவாதம், சமரசம், நெகிழ்வு தன்மை மூலம் அவற்றை தணிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், 1979இல் ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சியில் பயங்கரவாத தடைச் சட்டம் தற்காலிக ஏற்பாடகவே அறிமுகப் படுத் தப்பட்டது. பின்னர் வந்த அரசாங்கங்கள் அதை அரசியல் ஆதாயங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தின. அதனால்தான், கடுமையான சட்டமாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அடையாளப்

15

### பயங்கரவாத சட்டத்தில் மாற்றங்கள்
## ஜனாதிபதி ரணிலை இன்று சந்திக்கிறார் நீதியமைச்சர்!

கொழும்பு, ஏப். 24

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார்.

பாராளுமன்றத்தில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கு முன்னர் நீதியமைச்சர் ஜனாதிபதியை சந்திப்பார் என்று வெளிவிவகார அமைச்சர் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே இந்த சந்திப்பு இன்று நிகழவுள்ளது.

15

## பொலிஸார் என்று கூறி வாகனம் பறித்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

தம்மை பொலிஸார் என்று அறிமுகப்படுத்தியவர், லீசிங் பணம் கட்டவில்லை எனக்கூறி டிப்பர் வாகனத்தை பறித்த நிதி நிறுவனம் ஒன்றின் பணியாளரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் மேலும் மூவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நிதி நிறுவனம் ஒன்றிடம் லீசிங்

11

## கலாசார மண்டபம் அருகே புதுமை மாதாவுக்கு சிலை!

### யாழ். ஆயர் இல்லம் மறுப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையக் கட்டடத்துக்குப் பின்புறமாக புதுமை மாதா சிலை நிறுவும் நிகழ்வு என்று சமூகவலைத்தளங்களில் உலாவும் துண்டுப் பிரசுரம் உண்மைக்கு புறம்பானது என்று யாழ். ஆயர் இல்லம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று காலை முதல் சமூகவலைத்தளங்களில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையக் கட்டடத்துக்குப் பின்புறமாக புதுமை மாதா சிலை ஒன்று திறந்து வைக்கப் படவுள்ளதாக துண்டு பிரசுரம் ஒன்றின் படம் வெளியானது.

அத்துடன், அதில் மத ரீதியான முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்யும்

15

## இந்தியாவின் உதவிகளை நாம் மறந்துவிட முடியாது!

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன

நுவரெலியா, ஏப். 24

“இலங்கை பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்திருந்த போது எமக்கு உதவி செய்தது இந்தியா என்பதை நாம் மறந்துவிட முடியாது. எனவே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மிகவும் நெருக்கமான ஓர் உறவு இருக்கின்றது என்பதை யாராலும் மறந்து விட முடியாது.” - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா சீதா எலிய சீதையம்மன் ஆலயத்தின் புனித நீர் தடாக திறப்பும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டலும் முத்திரை வெளியீட்டு நிகழ்வும் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய

15

## தௌஹீத் ஜமாத் அமைப்பு கோட்டாபயவை ஆதரித்தது ஏன்?

### சம்பிக்க கேள்வி

கொழும்பு, ஏப். 24

தௌஹீத் ஜமாத் அமைப்பு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தேர்தலின்போது ஆதரவளித்தது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்த பல விசாரணை ஆணைக் குழுக்கள் அமைக்கப் பட்ட

15

## நான்கு மாகாணங்களுக்கு விரைவில் புதிய ஆளுநர்கள்!

கொழும்பு, ஏப். 24

நான்கு மாகாணங்களின் ஆளுநர்கள் விரைவில் பதவி நீக்கப்படவுள்ளனர் என்று அறிய வருகின்றது.

எனினும், பதவி பறிக்கப்படும் ஆளுநர்களில் ஒருவருக்கு மட்டும் முக்கிய அரச நிறுவனத்தில் பொறுப்பு வழங்கப்படவுள்ளது. அமைச்சர்களின் கடும் எதிர்ப்புக் காரண மாகவே அவர் பதவியிலி ருந்து மாற்றப்படுகின்றார் என்று அறிய வருகின் றது.

மேலும், பதவி நீக்கப் படும் ஆளுநர்களின் இடங்க

15

## நலன்புரி கொடுப்பனவு ஜூலை முதல்!

கொழும்பு, ஏப். 24

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி

15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பேராயரின் தலையீட்டால் பிரச்னைகள்!

### சிறீ லங்கா சுதந்திர கட்சி சாடல்

கொழும்பு, ஏப். 24

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய அரசியல் செயல்பாடுகளில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலையிடுவது பல்வேறு பிரச்னைகளை தோற்றுவித்துள்ளது. அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக செயல்படாமல் உண்மையை கண்டறிவதற்காகவே நாம் செயல்பட வேண்டும் என்று சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும், உயிர்த்த ஞாயிறு

15

## இப்படியும் நடக்கிறது...!

நெடுந்தீவில் நடந்த கொடூர படுகொலைகள் முழு யாழ்ப்பாணத்தையும் மாத்திரமல்ல ஒட்டுமொத்த தமிழர் பகுதிகளையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றது.

படுகொலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது மாத்திரமல்ல, கடற்படையின் முகாமுக்கு ஒரு சில மீற்றர் தூரத்திலேயே இந்தச் சம்பவம் நடந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

சம்பவம் நடந்த உடனேயே குற்றவாளிகளை கைதுசெய்யக்கோரி அங்கு போராட்டம் நடைபெற்றிருக்கின்றது.

குற்றவாளிகளை உடனே கைது செய்ய பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. சனிக்கிழமை காலையில் இவர்கள் வெட்டுக்காயங்களுடன் வீட்டில் காணப்பட்ட செய்தி வெளியே வந்ததைத் தொடர்ந்து நெருந்தீவுக்கான படகுச் சேவை இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கொலைஞர்கள் படகுச் சேவை இரத்துச் செய்யப்படும்வரை நெடுந்தீவிலேயே தங்கியிருந்திருப்பார்களா என்பது தெரியவில்லை.

சம்பவத்தில் காயமடைந்த ஆறாம் நபர் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். தொண்ணூற்று எட்டு வயதான அவர், புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழ்ந்தவர் என்றும் அங்கு வந்து உறவினர்களுடன் தங்கியிருந்திருக்கிறார் எனவும் கூறப்படுகின்றது. அவர் நலமடைந்த பின்னர்-

ஆகக்குறைந்தது அவர் நினைவு திரும்பி நடந்த சம்பவத்தை சொல்லக்கூடிய நிலைக்குத் திரும்பினால் கொலையோடு தொடர்புடைய பல உண்மைகள் தெரியவரலாம்.

இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருந்த போது கொலையாளி என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை புங்குடுதீவில் பொலிஸார் கைது செய்திருக்கின்றனர். அவர் தனி ஒருவராக இத்தனை கொலைகளையும் செய்திருக்க முடியுமா என்பதும் தெரியவில்லை. விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதுபற்றி மேலும் பேசுவது சரியாக இருக்காது.

அதுவல்ல, நாம் இன்று இந்தப் பத்தியில் சொல்ல வருவது.

இந்தச் சம்பவத்தை எழுதுகின்றபோது, அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் நடந்த பல வாள்வெட்டுச் சம்பவங்கள் பற்றிய விசாரணைகளில் வெளிவந்த ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.

அண்மையில் புலம்பெயர் தேசம் ஒன்றிலிருந்து அனலைதீவுக்கு வந்து தங்கியிருந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்துவதற்காக அங்கு வந்திருந்த இருவரை பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட பின்னர், கனடாவிலிருந்து தமக்கு பணம் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட நபர்மீது தாக்குதல் நடத்துவதற்காக இந்தியாவிலுள்ள நணபர் ஒருவர் மூலம் தம்முடன் தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆக, புலம்பெயர் நாடுகளில் வாழும் நம்மவர்கள் தமக்கு வேண்டப்படாத யாரையேனும் தாக்குவதற்கு இப்போது யாழ்ப்பாணத்தில் இயங்கும் வாள்வெட்டு குழுக்களை தொடர்பு கொள்கின்றார்கள் என்பது தெரிய வந்திருக்கின்றது.

அனலைதீவில் நடந்தது போன்ற பல சம்பவங்களில் இதுபோன்று புலம்பெயர்ந்தவர்களின் பணத்துக்காக தாக்குதல் நடந்த சம்பவங்கள் பல பதிவாகியிருக்கின்றன.

இதுபோன்ற சம்பவங்கள் தொடருமானால், புலம்பெயர்ந்தவர்கள் இனி தாயகத்துக்கு வருவதையே ஆபத்தானதாகக் கருதத் தொடங்கிவிடுவார்கள்.

ஆரம்பத்திலேயே இது போன்ற சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். ஆனால், எவ்வாறு இதனை தடுக்கலாம் என்பது பற்றியோ அல்லது அதனை தடுக்கவேண்டும் என்று சிந்திப்பதற்கோ யாரும் இருப்பார்கள் என்றும் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

எங்கே போகின்றது நமது மண் என்று அங்கலாய்ப்பதைத் தவிர வேறு எதனையும் செய்யமுடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

### எக்ஸ் -பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்

# சிங்கப்பூர் நீதிமன்றில் இன்று வழக்கு தாக்கல்!

கொழும்பு, ஏப். 24

எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கு உள்ளானதில் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இன்று திங்கட்கிழமை வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள சட்ட நிறுவனம் ஒன்றிடம் இந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று சட்ட மா அதிபர் சஞ்ஜெய் இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அனுமதியுடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த இழப்பீட்டு தொகை குறித்து எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாகவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் கூறினார். (ஐ)

# நாளைய ஹர்த்தாலை வெற்றியீட்ட வைப்பது மக்களின் உயரிய கடமை

### தமிழ்த் தேசியக் கட்சி

யாழ்ப்பாணம், ஏப். 24

நாளைய ஹர்த்தாலை முழு வெற்றியீட்ட வைப்பது வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மக்களின் உயரிய கடமை என்று சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

இந்த ஹர்த்தால் இரண்டு முக்கியமான விடயங்களை மையப்படுத்தி முன்னேடுக்கப்படுகின்றது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் என்ற அரசாங்கத்தின் அராஜக திட்டத்தை தோற்கடிப்பது. மற்றையது தமிழ் மக்களின் மரபுவழி தாயகமான வட, கிழக்கு மாகாணங்களில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்கத்துடன் ஆலயங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதாகும்.

இந்த இரண்டு ஆபத்துகளையும் எதிர்த்து தோற்கடிப்பதைத் தவிர எமக்கு வேறு வழி கிடையாது. உரிமை உணர்வு கொண்ட சமூகம் என்ற அடிப்படையில் நாம் இதனை செய்தாக வேண்டும். எமது உறுதியான எதிர்ப்பை சர்வதேசம் உணர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் வெளிப்படுத்துவதே இப்போது உடனடியாக நாம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையாகும்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையே ஒரு பூரண ஹர்த்தாலாக முன்னேடுக்கப்படுகின்றது.

இந்த ஹர்த்தால் வெற்றி பெற நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் கட்டுப்பாடாகவும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை செயல்பட வேண்டும்.

ஹர்த்தால் காரணமாக உடல் உழைப்பை நம்பி வாழும் தொழிலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த பணியாளர்கள் உட்பட சகலருக்கும் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு நாம் வருந்துகின்றோம். இது நம் அனைவரினதும் பொதுவான போராட்டம் என்ற அடிப்படையில் இந்த பாதிப்புக்களை எமது மக்கள் சகித்துக் கொண்டு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என பணிவன்புடன் வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# தீர்வை தந்தால் இரு வாரங்களில் விடைத்தாள் திருத்தி விடுவோம்!

### பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஏப். 24

தமது பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டால் இரண்டு வாரங்களுக்குள் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவு செய்ய முடியும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க கூட்டமைப்பு தெரிவித்தது.

எவ்வாறாயினும் தமது பிரச்னைகளுக்கு உறுதியான தீர்வுகளை வழங்க அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று சங்கம் குறிப்பிட்டது.

விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க, செயல்குழு கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இது தொடர்பாக நாளை செவ் வாய்க்கிழமை நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரூ. ஒன்றரை கோடி பெறுமதியான கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஏப். 24

சுமார் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு - கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுபெத்த வீதி சோதனை முகாமில் பட்டா ரக வாகனம் ஒன்றை சோதனையிட்ட போது, 71 கிலோ 160 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அத்துடன், இந்த கஞ்சா மொறட்டுவை - தெஹிவல பிரதேசத்துக்கு கடத்தப்பட்டதாகத் தெரிய வந்தது.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாடசாலை வான் கட்டணம் மே -01 முதல் குறைவடையும்

கொழும்பு, ஏப். 24

பாடசாலை போக்குவரத்துச் சேவைக்கான கட்டணங்கள் மே 1ஆம் திகதி முதல் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு இடையிலான அகில இலங்கை போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் ஹரிஸ்சந்திர பத்மசிறி இந்த அறிவிப்பை நேற்று விடுத்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் 5 வீதம் தொடக்கம் 8 வீதத்தினால் கட்டண குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
24.04.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்த விடயத்திலாவது கட்சிகளின் ஒன்றுமை?

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஆறு கட்சிகள் ஒன்றிணைந்து நாளைய தினம் வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன. குத்துவிளக்கு சின்னத்தின் கீழ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கும் முடிவை முன்னாள் விடுதலை இயக்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கூட்டாக மேற்கொண்டபோது விக்னேஸ்வரன் அந்தக் கூட்டிலிருந்து வெளியேறிருந்தார். எனினும், தற்போதையே ஹர்த்தால் அழைப்பில் விக்னேஸ்வரனும் பங்குகொண்டு தனது ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றார். தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

ஹர்த்தால் மற்றும் பேரணிகள் என்பவை நாட்டுக்கு புதிதல்ல. இதேவேளை தமிழர் அரசியலுக்கும் புதிதல்ல. எனினும், இதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியுமென்னும் நிலையில்தான் தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. அதிகளவில் பணத்தை செலவு செய்தால் சில புதிய வகையான எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். சுமந்திரன் மேற்கொண்ட கடலில் இறங்கி படகுப் பயணம் செய்வது. இதே போன்று, புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் நிதியாதரவு இருந்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் காங்கிரஸ் முன்னெடுத்தது போன்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை காட்போட்டில் பெரிதாக செய்து அதனை ஒரு வாகனத்தில் வைத்து ஊர்வலம் செல்லலாம்.

ஆனால், இவ்வாறான புதுமையான செயல்பாடுகளில் அனைத்துக் கட்சிகளாலும் ஈடுபட முடியாது. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் கூட்டணியும் ஒன்றிணைந்து செல்வநாயகம் காலத்திலிருந்து முனனெடுக்கப்பட்டுவரும், மிதவாத தேசிய எதிர்ப்பு வடிவமான ஹர்த்தால் நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர். இவ்வாறான அழைப்புகளுக்கு மக்கள் குறிப்பிடத்தக்களவு ஆதரவை எப்போதுமே வழங்கி வந்திருக்கின்றார்கள். மக்களின் ஆதரவு என்பது உணர்வுநிலை சார்ந்தது.

ஹர்த்தால் இதேபோன்று முன்னர் இடம்பெற்ற எழுக தமிழ், பொத்துவில் தொடங்கி பொலிகண்டி, இறுதியாக நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளின் அரசியல் விளைவுகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையில்லை. ஏனெனில், இவ்வாறான விடயங்களை கொழும்பு பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள பொலிஸாருக்கான விடயமாகவே இவற்றை அரசாங்கம் கையாள்கின்றது. பொலிஸார் - சட்டம் ஒழுங்கு என்னும் அடிப்படையில் இவற்றில் தலையீடு செய்கின்றனர். முடியுமானவரையில் மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க முயற்சிக்கின்றனர் - முடியாமல் போகும்போது பொலிஸார் விலகி நின்று அவதானிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண வருகையின்போது, காண்பிக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைளின்போது, பொலிஸார் மீது சாணியை கரைத்து ஊற்றியபோதிலும்கூட அவர்கள் கடுமையாக நடந்துகொள்ளவில்லை. அதே வேளை, தென்பகுதியில் ஒப்பீட்டடிப்படையில் பொலிஸார் சற்று கடுமையாகவே நடந்து கொள்கின்றனர்.

எனவே, வடக்கு - கிழக்கில் காண்பிக்கப்படும் ஜனநாயக எதிர்ப்புகளை சட்டம், ஒழுங்கென்னும் அணுகுமுறையின் ஊடாகவே அரசாங்கம் கையாள முயற்சிக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அமைதி வழி எதிர்ப்புகளை காண்பிப்பதில் எந்தவொரு தடையுமில்லை. ஆனால், இவ்வாறான எதிர்ப்புகள் மூலம் அரசாங்கத்தின் அணுகுமுறையை மாற்றியமைக்க முடியுமா? இதுவரையான அனுபவங்கள் இல்லையென்னும் பதிலையே நமக்கு கூறுகின்றன.

ஹர்த்தால், பேரணிகள், பல்கலைக்கழக மாணவர்களின் வருடாந்த உற்சாகம் - இவ்வாறான செயல்களுக்கு அப்பால், தமிழ் மக்களின் பிரச்னைகளை உடனடி - இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையில் கையாளக்கூடிய அரசியல் பொறிமுறை தொடர்பில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் சிந்திக்க வேண்டும். ஆனால், இவ்வாறான விடயங்களிலாவது கட்சிகள் ஓரணியாக நிற்க வேண்டும். ஆனால், அரசியலில் ஒன்றாக நிற்பது என்னும் விடயம்தான், இங்கு தொடர்ந்தும் பிரச்னையாக இருக்கின்றது. மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி சிந்தித்தால் இது ஒரு சிறிய விடயம். ஆனால், இங்கு பிரச்னை மக்களைவிடவும் தங்களின் சொந்த நலன்கள் கட்சிகளின் தலைவர்களுக்கு முக்கியமானதாக இருக்கின்றன.

# நாளைய கதவடைப்பு போராட்டத்துக்கு ஆயர்கள், பல்கலைக்கழகம் ஆதரவு!

யாழ்ப்பாணம், ஏப். 24

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பின்பேரில் நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட ஆயர்கள், யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் மற்றும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு என்பன தெரிவித்துள்ளன.

'பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவும், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் நாளை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தமது பூரண ஆதரவை வழங்கும்' என்று அதன் இயக்குநர் அருட்பணி ச. வி. ப. மங்களராஜா தெரிவித்துள்ளார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இலங்கைக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் பொருந்தாது. அதனை முற்றாக எதிர்க்க வேண்டும். நாம் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவை வழங்குகின்றோம்' என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'மக்களினுடைய சுதந்திரத்துக்கும் உரிமைக்கும் பாதகமான விடயங்களுக்கு எதிராக குரல் கொடுக்கப்பட வேண்டும். ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவளிக்கின்றேன்' என்று திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இமானுவேல் தெரிவித்தார்.

'அமைதியான சூழல் நிலவுவதற்காக நாங்கள் எப்பொழுதும் போராடிக் கொண்டே இருப்போம். இவ்வாறான சட்டங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும். ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றேன்' என்று மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

'பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் அதே போல சகோதர மொழி பேசுகின்ற மக்கள் முனைப்போடு இதனை எதிர்க்க வேண்டும் என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்து. இம்முறை அனைத்து கட்சிகளும் ஒரே கண்ணோட்டத்தில் ஒரே தளத்தில் நின்று ஹர்தாலுக்கு அழைப்பு விடுத்ததை நான் பாராட்டுகின்றேன். இதில் எந்தவித வேறுபாடுகளுமற்று அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் அனைத்து தரப்பினரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்' என்று தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக கலைகலசார பீட மாணவர் ஒன்றியம், இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன தெரிவித்துள்ளன. (ஐ)

# நாளைய ஹர்த்தாலுக்கு சந்தை வியாபாரிகள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 24

நாளை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இடம்பெறவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியத்தின் தலைவர் சின்னத்துரை முகுந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களின் பூர்வீக இன, மத அடையாளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற இந்த கடையடைப்பு போராட்டத்துக்கு வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியம் பூரண ஆதரவை வழங்குவதற்கு ஏக மனதாக தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக தமிழ் மக்களின் இருப்பை காப்பதற்கான இவ்வாறான போராட்டங்களுக்கு எமது வாழ்வாதாரத்தையும் தாண்டி ஒத்துழைப்பை கொடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளோம். ஆகவே, இந்த கடையடைப்பு போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சந்தைகளிலும் உள்ள வியாபாரிகள் அன்றைய தினம் வியாபார நடவடிக்கையில் ஈடுபடாமல் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

# தேசிய கண் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 24


தேசிய கண் மருத்துவமனையில் இன்று திங்கட்கிழமை முதல் சத்திரசிகிச்சைகள் வழமை போன்று இடம்பெறும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய கண் மருத்துவமனையில், சத்திரசிகிச்சையின் பின்னர் பல நோயாளர்களுக்கு ஏற்பட்ட தொற்று காரணமாக சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டன.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பிரெட்னிசோலோன்' என்ற கண் சொட்டு மருந்தின் பயன்பாட்டாலேயே இந்த நிலைமை உருவானது. இதையடுத்து மறு அறிவித்தல்வரை இந்த மருந்தின் பாவனை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல் தெரிவித்துள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 24 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 11
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பஞ்சமி




**மேடம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். புது வாய்ப்புகள் வரும். உற்சாகமான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு சுமார்தான். விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

**மிதுனம்**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உங்களால் வளர்ச்சி யடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறை வேறும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கன்னி**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாக பேசுவார்கள் செயல்படுவீர்கள். புதுஒப்பந்தங்களால் லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை ஓரளவு குறையும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
நண்பர்கள் உதவியுடன் நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். ஒரு செயல் வெற்றி பெறும். சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத லாபம் உண்டு. சில ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். முன்னேறும் நாள்.

# முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தினர் ஓர் ஆண்டில் ரூ. 30,000 கோடி குவிப்பு

## பாரதிய ஜனதா கட்சி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 24

முதல்வர் ஸ்டாலின் குடும்பத்தினர் ஓராண்டில் 30 ஆயிரம் கோடி (இந்திய) ரூபாய் குவித்துள்ளனர் என்று பா. ஜ. க. குற்றஞ்சாட்டியுள்ளது.

தி. மு. க.அமைச்சர்கள், எம்.பிக்கள் உள்ளிட்ட 12 பேரின் சொத்துப் பட்டியலை பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை கடந்த 14ஆம் திகதி காணொலி பதிவாக வெளியிட்டார். இதுதொடர்பாக பா. ஜ. க. தேசிய செய்தித் தொடர்பாளர் சையது ஜாபர் இஸ்லாம், டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

தமிழக நிதி அமைச்சர், செய்தியாளர் ஒருவரிடம் பேசியுள்ளார். அந்தக் காணொலி அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் மருமகன் சபரீசன், அவரின் மகன் உதயநிதி ஆகியோர் ஓராண்டில் ரூ. 30 ஆயிரம் கோடியை குவித்துள்ளனர். இதை நான் கூறவில்லை. தமிழக நிதித்துறை அமைச்சர் கூறியிருக்கிறார்.

அந்தப் பணத்தை எங்கு, எப்படி பதுக்குவது என்பது அவர்களின் மிகப்பெரிய கவலையாக இருக்கிறது. இங்கிலாந்தில் 2 நிறுவனங்களை சபரீசன் தொடங்கியுள்ளார். முறைகேடாக சுருட்டிய பணத்தை முதலீடு செய்வதற்காகவே இந்த நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன.

ஓராண்டில் இவ்வளவு பெரிய தொகையை குவித்தது எப்படி என்பது மிகவும் வியப்பாக இருக்கிறது. இது, சாமானிய மக்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம். மக்கள் நலனுக்காக செலவிடப்பட வேண்டிய பணம். இந்த பணத்தை தமிழக முதல்வர், அவருக்கு நெருக்கமான நண்பர்கள் சட்டத்துக்கு விரோதமாக கொள்ளையடித்து உள்ளனர்.

ஒருபுறம் பிரதமர் நரேந்திர மோடி ஊழலுக்கு எதிராக அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மறுபுறம் தி. மு. க. அதிதீவிரமாக ஊழலில் ஈடுபட்டு வருகிறது. காந்தி (சோனியா காந்தி) குடும்பம் மற்றும் தி. மு. க. ஊழலில் திளைத்து வருகின்றன. மக்களின் பணத்தை அவர்கள் சூறையாடி வருகின்றனர் - என்றார். (ஐ)

# பொதுச் செயலராக பழனிசாமி; எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்கு

புதுடில்லி, ஏப். 24

அ. தி. மு. க. பொதுச் செயலாளராக பழனிசாமியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளதை எதிர்த்து புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் புதிதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அ. தி. மு. கவின் திருச்செந்தூர் வழக்கறிஞர் பா. ராம்குமார் ஆதித்தன், அ. தி. மு. க. முன்னாள் எம்.பியான கே. சி. பழனிசாமி மகன் சுரேன் பழனிசாமி ஆகியோரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜெயலலிதா மறைந்தபோது நடைமுறையில் இருந்த கட்சி விதிகளில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களை எதிர்த்தும், பழனிசாமியை பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்தது செல்லாது என்று அறிவிக்க கோரியும் நாங்கள் தொடர்ந்த வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஒருங்கிணைப்பாளர்கள் தேர்வுசெய்யப்பட்டது செல்லாது எனும்போது, அவர்களால் தெரிவான பொதுக்குழு உறுப்பினர்களின் பதவியும் செல்லாது. தவிர, 2022 ஜூன் 23ஆம் திகதிக்கு பிறகு, பொதுக்குழு உறுப்பினர்களின் பதவியும் காலாவதியாகி விட்டது. பொதுக்குழு உறுப்பினர்களுக்கே சட்ட அங்கீகாரம் இல்லாதபோது, பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் கட்சியை கட்டுப்படுத்தாது.

ஜூலை 11 தீர்மானத்தில், அன்றைய தினம் கட்சி உறுப்பினர்களாக உள்ள அனைவரும் பொதுச் செயலாளர் தேர்தலில் வாக்களிக்க தகுதிஉடையவர்கள் என்று அறிவித்துவிட்டு, வாக்காளர் பட்டியலை வெளியிடாமலேயே பொதுச் செயலாளர் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டது ஜனநாயக மற்ற செயல்.

எனவே, தேர்தல் ஆணையம் பழனிமியை பொதுச் செயலாளராக அங்கீகரித்திருப்பதை செல்லாது என அறிவித்து, அதை இரத்து செய்ய வேண்டும் என்றும் புதிய வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# அமைச்சர் தியாகராஜனுக்கு அண்ணாமலை பகிரங்க சவால்!

சென்னை, ஏப். 24

“தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இந்த குரல் பதிவு பொய்யானது. யார் குரலில் வேண்டுமானாலும் இப்படிப் பேசி வெளியிட முடியும் என்று சமாளித்துக் கொண்டிருப்பதால், அவர் அந்த குரல் பதிவில் பேசிய அதே கருத்துகளை நான் பேசுவதைப் போல ஒரு குரல் பதிவை வெளியிடுமாறு சவால் விடுகிறேன்” என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக நிதியமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன், திமுக தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மருமகன் சபரீசன் ஆகியோர் ஊழல் மூலம், ஒரே ஆண்டில், 30,000 கோடி ரூபாய் பணத்தை முறைகேடாக சம்பாதித்ததாகப் பேசியிருந்த குரல் பதிவின் உண்மைத் தன்மையை, சுதந்திரமான, நியாயமான தடயவியல் தணிக்கை செய்யக் கோரி, தமிழக பா. ஜ. க. தலைவர்கள்



குழு ஒன்று ஆளுநரை சந்திக்கிறது.

தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், இந்த குரல் பதிவு பொய்யானது, யார் குரலில் வேண்டுமானாலும் இப்படிப் பேசி வெளியிட முடியும் என்று சமாளித்துக் கொண்டிருப்பதால், அவர் அந்த குரல் பதிவில் பேசிய அதே கருத்துகளை நான் பேசுவதைப் போல ஒரு குரல் பதிவை வெளியிடுமாறு சவால் விடுகிறேன். என்னுடைய குரல் மாதிரியை ஆய்வுக்கு நான் வழங்க தயார்.

தமிழக நிதியமைச்சரும் தனது குரல் மாதிரியை வழங்க வேண்டும். இரண்டு ஒலி மாதிரிகளையும் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் நடக்கும் விசாரணை ஆணையத்திடம் சமர்ப்பிக்கலாம். இரண்டு குரல் பதிவுகளின் உண்மைத் தன்மையை, நீதிமன்றம் விசாரித்துக் கூறட்டும்.

காலகாலமாக பதவிகளை எல்லாம் வாரிசுகள் அனுபவித்துக் கொண்டு, தனது கட்சித் தொண்டர்களை சுவரொட்டி மட்டுமே ஒட்டவைத்து ஏமாற்றுவது போல, இது அத்தனை எளிதானதல்ல என்பதை தமிழக நிதியமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும் - என்றும் கூறியுள்ளார்.

முன்னதாக, தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், செய்தியாளர் ஒருவருடன் ஆங்கிலத்தில் உரையாடும் குரல் பதிவு ஒன்றை பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். ஆங்கில உரையாடலுக்கான தமிழ் மொழி பெயர்ப்பும் அந்தக் காணொலியில் இடம்பெற்றிருந்தது. இந்தச் சூழலில் அது ‘போலியானது’ என அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விளக்கம் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## மினிசூறாவளியால் வரணியில் ஆலயம், வீடுகள் சேதமாகின!

தென்மராட்சி, ஏப். 24

வரணியில் நேற்று திடீரென வீசிய மினிசூறாவளியால் ஆலயம் ஒன் றும் வீடுகளும் சேதமடைந்தன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின் வரணி - நாவற்காடு பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றால் ஆலயம் ஒன்றும் வீடுகளும் சேதமடைந்தன.

திடீரென வீசிய மழையுடன் கூடிய கடும் காற்றால் நாவற்காட்டில் அமைந்துள்ள ஆலயத்தின் மேற்கூரை தூக்கி வீசப்பட்டது. அத்துடன், தென்னை, பனை மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் வீடுகள் சேதமடைந்தன. இத னால், வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் அப்ப குதியல் மின்சாரமும் தடைப் பட்டது. (ஐ- 02)

## சட்டவிரோத மணல் அகழ்வு; இரு சந்தேக நபர்கள் கைது!

கிளிநொச்சி, ஏப். 24

பளை பொலிஸ் பிரிவின் முகாவில் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 2 சந்தேக நபர்கள் விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன், இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் கைதான இருவரும் கைப்பற்றப்பட்ட அந்த இரண்டு வாகனங்களினதும் சாரதிகள் என கூறப்படுகிறது.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்கள் மற்றும் கைதான சந்தேக நபர்கள் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பாதிக்கப்பட்டோரையும் உள்ளடக்கி நம்பிக்கையான பொறிமுறை தேவை!

## நீதியரசர் நவாஸ் தலைமையிலான குழு பரிந்துரைக்கும்

கொழும்பு, ஏப். 24

**புதிதாக நிறுவப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பல்லினத்தவரையும், பல்துறைசார் நிபுணர்களையும், பாதிக்கப்பட்ட தரப்பினரையும் உள்ளடக்கிய நம்பத்தகுந்த பொறி முறையாக அமையவேண்டியது அவசியமெனத் தமது இறுதி அறிக்கையில் வலியுறுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள நீதியரசர் ஏ. எச். எம். டி. நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 30 ஆணையாளர்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமெனப் பரிந்துரைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.**

நாட்டில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச்செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ. எ ச். எம். டி. நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச்செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ். மாநகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகிய மூவரடங்கிய ஆணைக்குழு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டதிலிருந்து கடந்த ஆண்டு நவம்பர் வரை பலதரப்பட்ட முக்கியஸ்தர்கள் ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்துள்ளனர். இவ்வாறான தொரு பின்னணியில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் மேற்படி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை முடிவுக்குவந்த நிலையில், ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை முதலில் இவ்வாண்டு ஜனவரி 31ஆம் திகதி வரையும், பின்னர் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டு, தற்போது எதிர்வரும் மே 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் மேமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்கக்கூடியவகையில் தயாராகி வருகின்றது. இது இவ்வாறிருக்க ஏற்கனவே ஆணைக்குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையிலும், கடந்த பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட சுருக்கத்திலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்படவேண்டும் என்ற பரிந்துரை வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாகவே அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் இதுகுறித்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கட்டமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புதிதாக ஸ்தாபிக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பல்லினத்தவரையும், பல்துறைசார் நிபுணர்களையும் பாதிக்கப்பட்ட தரப்பினரையும் உள்ளடக்கிய நம்பத்தகுந்த பொறிமுறையாக அமைய வேண்டியது அவசியமென ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. அதுமாத்திரமன்றி கடந்த 1983 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அதேபோன்று தென்னாபிரிக்கா, கொலம்பியா, இலத்தீன் அமெரிக்கா உள்ளடங்கலாக சர்வதேச நாடுகளில் இயங்கிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய ஒப்பீடுகளை உள்ளடக்கியும், இலங்கையில் கடந்தகாலங்களில் இயங்கிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, உடலாகம ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை ஒன்றிணைத்து எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகளை இணைத்தும் தமது இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

மேலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது 30 ஆணையாளர்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமெனப் பரிந்துரைப்பதற்கு நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக அறிய வருகின்றது. (ஐ)

# சிங்கள மயமாக்கல் எதிர்ப்பை தடுக்கவா கொலைகள் அரங்கேற்றப்படுகின்றன?

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 24

நெடுந்தீவை சிங்கள மயமாக்கும் திட்டம் சிங்கள அரசுக்கு உள்ளது. வெடியரசன் கோட்டை வரலாற்றை மாற்றும் முயற்சி அண்மையில் இடம்பெற்றபோது மக்களின் எதிர்ப்பு இடம்பெற்றது. இவற்றை தடுக்கவே இவ்வாறான கொலைகள் அரங்கேற்றப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், நெடுந்தீவு கூட்டுப்படுகொலை தொடர்பில் ஆழமான விசாரணை நடத்தப்பட்டு உரிய நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நெடுந்தீவில் நேற்று ஐந்து பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டும் ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தீவக பகுதிகளில் இலங்கை ஆயுதப் படைகளின் முகாமுக்குள் மக்கள் வாழ்வதைப் போன்றும் நெடுந்தீவை எடுத்துக் கொண்டால் கடற்படை முகாமுக்குள் தமிழர்கள் வாழ்வதைப் போன்ற நிலையுள்ளது.

குறித்த சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் கடற்படையின் முகாமுள்ளது. தற்போது இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த இடத்தில் நாயொன்றும் கொலை செய்யப்பட்டிருக்கின்றது. நாயின் அசாதாரண நடவடிக்கையால் வெளித்தரப்புக்கள் எவரும் வந்துவிடக்கூடாது என்பதால்தான் கொல்லப்பட்டதா எனற சந்தேகம் நிலவுகின்றது.

எனவே, கொலை நடக்கும் சந்தர்ப்பத்தில் இந்தவிடயம் கடற்படையினருக்கு தெரியாமலிருந்ததா அல்லது தெரிந்தும் தெரியாதது போல் இருந்தார்களா என்ற சந்தேகம் எழுகின்றது. இந்த விடயம் தொடர்பாக ஆழமான விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி வழங்கப்பட வேண்டும்.

நெடுந்தீவை சிங்கள மயமாக்கும் திட்டம் சிங்கள




அரசுக்கு உள்ளது. வெடியரசன் கோட்டை வரலாற்றை மாற்றும் முயற்சி அண்மையில் இடம்பெற்றபோது மக்களின் எதிர்ப்பு இடம்பெற்றது. இவற்றை தடுக்கவே இவ்வாறான கொலைகள் அரங்கேற்றப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது.

கடந்த காலங்களில் பல விடயங்களுக்கான நீதி மூடிமறைக்கப்படுகின்ற தருணத்தில் இந்த விடயத்துக்கு எவ்வாறு நீதி வழங்கப்படும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. எனினும், நீதிக்கான பயணத்தில் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் - என்றார். (ஐ)

## சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

வடமராட்சி, ஏப். 24

மருத்துவர் ஒருவரின் வளவிலிருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவில் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருத்துவர் வீட்டு வளவை சுத்தம் செய்து கொண்டிருந்த போது கைக்குண்டை கண்டெடுத்துள்ளார். இதையடுத்து, அவர் அதனை சாவகச்சேரி இராணுவ முகாமில் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக இராணுவத்தினர் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அந்த இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ -02 - 03)

# ஆசியாவின் விமான, கப்பல் கேந்திரமாக இலங்கை மாறும்!

## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 24

**ஆசிய வலயத்தின் முழுமையான விநியோக மற்றும் போக்குவரத்து மாற்றங்களை கருத்தில் கொண்டு இந்து சமுத்திரத்தின் விமான மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கொழும்பு - வடக்கு துறைமுகத்தின் 30 வருட அபிவிருத்தி திட்டத்தினை வெளியிடுவதற்கான நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு, மேற்கு இறங்குதுறைகளின் அபிவிருத்தி செயல்பாடுகள் தற்போதும் இடம் பெற்று வருகின்ற நிலையில், 2030ஆம் ஆண்டளவில் அவற்றை முழுமைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சை இரு வேறு அமைச்சுக்களாக பிரிக்கலாம் அல்லவா என பலரும் கேட்கின்றனர். இருப்பினும், இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றிய மைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம் என்பதாலேயே இரு அமைச்சுக்களையும் ஒன்றாக்கியுள்ளோம்.

25 வருடங்களுக்கு எமது திட்டம் என்ன, அவற்றை எவ்வாறு செயல்படுத்தலாம் என்ற மாற்றுச் சிந்தனைகள் அவசியமானது என்பதோடு இலங்கையை விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை கேந்திர நிலையமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது, இந்தியா, பங்களாதேஷ், ஈரான் உள்ளிட்ட மக்ரான் கடல் வலயத்தின் மேம்பாடுகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

அத்தோடு, சுற்றுலாத்துறை வர்த்தக செயற்பாடுகளுக்கு அவசியமான வசதிகளை கொண்டதாக அம்பாந்தோட்டை, திருகோணமலை துறைமுகங்கள் காணப்படுகின்றன.

அடுத்த 25 வருடங்களுக்குள் வங்காள விரிகுடாவை அண்மித்த வலயத்தில் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, மியன்மார் ஆகிய நாடுகள் பெரும் அபிவிருத்திகளை எட்டும் என்ற நிலையிலிருந்து திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து, நாம் இந்தியாவுடன் பேச்சுகளை முன்னெடுக்கிறோம். அதற்கமைய, திருகோணமலை துறைமுகத்தை வங்காள விரிகுடா வலயத்தின் சுற்றுலா வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பிரதான தளமாக மாற்றியமைக்கக்கூடிய இயலுமை பற்றி தேடியறிய வேண்டியது அவசியமாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தற்போதும் அதன் முழுமையான கொள்ளளவுடன் இயங்கவில்லை என்பதால் அடுத்த 10 - 15 வருடங்களுக்குள் அதனை அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு உற்பத்திச் செயல்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் விரிவாக ஆராய வேண்டியதும் அவசியமாகும்.

மறுமுனையில், கட்டுநாயக்க விமான நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்வதோடு, மத்தல விமான நிலையத்தினை வணிக ரீதியில் மேம்படுத்த வேண்டும். இவற்றோடு, வடக்கு மாகாணத்தில் பலாலி விமான நிலையத்தை திறந்துள்ளதற்கு மேலதிகமாக வட மத்திய மாகாணத்தின் உள்ளக விமான சேவைகளுக்காக ஹிங்குரங்கொட பிரதேசத்தை அபிவிருத்தி செய்துள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)

# போலி யாப்பை பயன்படுத்தியே பெரமுனவுக்கு புதிய தவிசாளர்!

## சரித ஹேரத் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

போலி யாப்பை முன்னிலைப்படுத்தி பொதுஜன பெரமுனவின் புதிய தவிசாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய தேசிய கட்சிக்கு அடிபணிவதற்காக பொதுஜன பெரமுன கட்சியின் அடிப்படை யாப்புக்கு முரணாக செயல்படுகிறது என்று சுதந்திர மக்கள் சபையின் பேராசிரியர் சரித ஹேரத் எம். பி. தெரிவித்துள்ளார்.

நாவலவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு அடிபணியும் வகையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன செயல்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான பொதுஜன பெரமுனவின் பொதுச்சபை கூட்டம் கட்சி யாப்புக்கு முரணானது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உண்மையான யாப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச்சபை கூட்டத்தின் கட்டமைப்பு தொடர்பில் கட்சி யாப்பில் குறிப்பிடப்படவில்லை.

இல்லாத விடயங்களை முன்னிலைப்படுத்தி கூட்டத்தை நடத்தி, எவ்வாறு தீர்மானங்களை எடுக்க முடியும்? போலி யாப்பை முன்னிலைப்படுத்தியே பொதுஜன பெரமுனவின் புதிய தவிசாளர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பொதுச் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிச்சயம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம் - என்றார். (ஐ)

# ஆசியாவில் இலங்கையிலேயே அதிக நீரிழிவு நோயாளர்கள்!

கொழும்பு, ஏப். 24

ஆசிய நாடுகளில் அதிக நீரிழிவு நோயை கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் சுகாதார கொள்கை நிறுவனம், ரஜரட்டை ருகுணை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு அதாவது 23வீதம் பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் இந்த எண்ணிக்கை 31வீதமாக அதிகரித்துள்ளது. அதாவது மூன்று வளர்ந்தவர்களில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் இந்த ஆய்வில் தெரிய வந்தது. (ஐ-சி)

# 25 கோடி டொலர் இலஞ்சம் பெற்றவரை பாராளுமன்றில் பகிரங்கப்படுத்துங்கள்!

## விமல் வீரவன்ஸ எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஏப். 24

எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தரப்பிடமிருந்து 250 மில்லியன் டொலர் இலஞ்சம் பெற்ற இலங்கையர் யார் என்பதை நீதியமைச்சர் பாராளுமன்றத்தில் பகிரங்கப்படுத்த வேண்டும். இலங்கைக்கு கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டை தடுக்க முன்னெடுக்கப்படும் முறையற்ற செயல்பாடுகள் தொடர்பில் நாட்டு மக்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவரின் கட்சிப் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும், 2021ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்குள்ளாகி, கடலில் மூழ்கிய எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடல் உயிரினங்களுக்கும், கடல் வளங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட முடியாது. நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை தடுப்பதற்காக இலங்கையர் ஒருவருக்கு கப்பல் தரப்பினரிடமிருந்து 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதி வைப்பு செய்த வங்கிக் கணக்கு இலக்கம் வரை அறிந்துள்ளதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து ஒட்டுமொத்த கடல் வளத்தையும் தாக்கியுள்ளது. இந்த விடயத்தை வைத்தும் இலஞ்சம் பெறுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது. இலஞ்சம் பெற்றது யார் என்பதை பாராளுமன்றத்தின் ஊடாக நீதியமைச்சர் பகிரங்கப்படுத்த வேண்டும்.

எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தின் ஊடாக நட்டஈட்டை பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# எதிர்க்கட்சிகளை பலவீனமாக்கவே தேசிய அரசாங்கம் குறித்துப் பேச்சு!

## நாலக கொடஹேவா எம். பி.

கொழும்பு, ஏப். 24

அரசாங்கத்திடம் சாதாரண பெரும்பான்மை உள்ளது. ஆகவே, தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டிய தேவை கிடையாது. எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தவே தேசிய அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுக்க பொதுஜன பெரமுனவின் பொதுச் சபை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் யாப்புக்கு அமைய பொதுச் சபை கூட்டம் இடம்பெறவில்லை. எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை நீதி மன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

பொதுஜன பெரமுன என்பது கட்சி அல்ல அது ஒரு குடும்ப நிர்வாகம் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமானால், தேசிய அரசாங்கத்தில் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என ஆளும் தரப்பு உறுப்பினர்களில் ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள்.

யாருடைய தேவைக்காக தேசிய அரசாங்கம் அமைக்கப்படுகிறது என்ற கேள்வி எம் மத்தியில் காணப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் ஆதரவை பெற்று அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. ஏனெனில், அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை உள்ளது. தேசிய அரசாங்கம் என்று குறிப்பிட்டுக்கொண்டு எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தும் செயல்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன.

சுதந்திர மக்கள் சபை அல்லது சுதந்திர மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் தேசிய அரசாங்கத்தில் இணையப் போவதில்லை. சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தேசிய அரசாங்கத்தில் இணைய வேண்டிய தேவை உள்ளது. ஆகவே, சுதந்திர கட்சியினர் ஒருவேளை தேசிய அரசாங்கத்தில் ஒன்றிணையலாம் - என்றார். (ஐ)

# நல்லூர் விடுதி மீது தாக்குதல்: 5 சந்தேக நபர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 24

நல்லூரில் அமைந்துள்ள விடுதி ஒன்றை தாக்கி சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைதான பெண்கள் உள்ளிட்ட 6 பேரில் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டது. அத்துடன், ஐவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை குடும்பப் பிரச்னை காரணமாக நல்லூர் பகுதியிலுள்ள விடுதி ஒன்று பெண்களும் உள்ளடங்கிய 7 பேர் கொண்ட கும்பலால் அடித்து நொருக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டில் அருண் சித்தார்த், அவரின் மனைவி என 6 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் பாலூட்டும் தாய் என்பதால் கடுமையான எச்சரிக்கையின் பின்னர் அவருக்கு பிணை அளிக்கப்பட்டது. ஏனைய 5 பேரையும் எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ஐ-03)

# கொழும்பு துறைமுக நகரம் முதலீடுகளை ஈர்க்கவில்லை!

கொழும்பு, ஏப். 24

**சீனாவின் முதலீட்டில் அமைக்கப்பட்ட போர்ட் சிட்டி என்ற கொழும்பு துறைமுக நகரம் இன்னும் முதலீட்டை ஈர்க்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2021 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை பொறுத்தவரையில் பூச்சிய நிலையே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகங்கள் மற்றும் முயற்சிகளுக்கு வழங்கப்படவேண்டிய சட்டபூர்வ சலுகைகள் மற்றும் விலக்குகளை அரசாங்கம் இன்னும் வர்த்தமானியில் வெளியிடாமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் கடைசியாக பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி. எல். சி. நிறுவனம், 2021 டிசெம்பரில், நிலம் ஒன்றின் 99 வருட குத்தகைக்காக 114 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 86 மில்லியன் அமெரிக்க டொலர்களை வளர்ச்சிக்காக செலவிடுவதாக நிறுவனம் கூறியுள்ளது.

ஆனால், இந்தத் திட்டங்களில் எவ்வித முன்னேற்றங்களும் இல்லை.

குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தைப்படுத்தக்கூடிய சலுகைகள் மற்றும் விலக்குகள் இல்லாததால் இந்த நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போலியான செய்தி பரப்பல் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 24

சமூக ஊடக செயல்பாட்டாளர் ஒருவரால் இலங்கை கடற்பரப்புக்குள் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள உண்மைக்கு புறம்பான கருத்துகள் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை கடல்பரப்புக்குள் விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்களால் நாட்டின் கடற்பரப்புக்கு ஏற்பட்ட மாசுக்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கும்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் அரசாங்கத்தின் உயர் சட்டத்தரணி ஆகியோர் தமக்கான தனிப்பட்ட இலாப நோக்கத்துக்காக செயல்பட்டனர் என்று காணொலி மூலம் ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் உயர் அதிகாரிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கோபத்தை தூண்டும் வகையிலும், அரச உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் முன்னெடுக்கும் சட்ட ரீதியான செயல்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக முன்வைத்துள்ளமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் இருவரால் இவ்வாறு குற்றப் புலனாய்வு பிரிவில் அளிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கமைய, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# சிறுநீர் கழிக்க வேண்டாம் என்று கூறியவரை மூவர் குழு தாக்கியது!

வவுனியா, ஏப். 24

வர்த்தக நிலையத்தின் முன்பாக சிறுநீர் கழிக்க வேண்டாம் என்று கூறிய வர்த்தகரை மூவர் குழு தாக்கியதில் அவர் பலத்த காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வவுனியா பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள வர்த்தக நிலையம் முன்பாக மூவர் குழு அங்கு சிறுநீர் கழித்துள்ளனர்.

இதை அவதானித்த வர்த்தகர், அவ்விடத்தில் சிறுநீர் கழிக்காது அருகில் உள்ள பொது கழிப்பறைக்கு செல்லுங்கள் என்று கூறியுள்ளார். இதனையடுத்து, அந்தக் குழு வர்த்தகரை தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

இதில் பலத்த காயமடைந்த வர்த்தகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மற்றைய இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோட்டாபய இல்லத்தின் நீர் கட்டண நிலுவை ரூ. 46,000

கொழும்பு, ஏப். 24

முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவுக்கு ஒதுக் கப்பட்டுள்ள உத்தியோக பூர்வ இல்லத்துக்கான குடிதண்ணீர் கட்டணத்தை எவ்வாறு செலுத் துவது என்பது தொடர்பில் மேலதிக ஆலோசனைகளை கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அலுவலகம் ஜனாதிபதி செயலகத்துக்குக் கடிதம் எழுதியுள்ளது.

ராஜபக்ஷவின் அலுவலகம் அனுப்பிய கடிதத்தில், கடந்த மாதத்துக்கான கட்டணமான 46,000 ரூபாயில் அந்த இல்லத்தின் முந்தைய குடியிருப்பாளர்கள் செலுத்தாத நிலுவைத் தொகையும் அடங்கும்.

எனவே, இந்த விவகாரத்தை எவ்வாறு தொடர்வது என்பது குறித்த கூடுதல் அறிவுறுத்தல்களைக் கோரியுள்ளது. எனினும், இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் பதில் வழங்கவில்லை எனக் கூறப்படுகின்றது. (ஐ)

# நெல் விவசாயிகளுக்கு வழங்க 1,100 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

கொழும்பு, ஏப். 24

சிறுபோகத்தில் நெல் பயிர் செய்கைக்கான விவசாயிகளின் உரக் கொள்வனவுக்கு, நிவாரணம் வழங்க ஆயிரத்து 100 கோடி ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

5 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்காக இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

முன்னர் அறிவித்தது போன்று, ஒரு ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடலுக்காக 20 ஆயிரம் ரூபாயும், 2 ஹெக்ரெயருக்கு 40 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உறவினரிடையே மோதல்; ஒருவர் வெட்டிக்கொலை!

கொழும்பு, ஏப். 24

உறவினர்களிடையே ஏற்பட்ட வாக்கு வாதம் வாள் வெட்டில் முடிந்தில் ஒருவர் உயிரிழந்தவர் மற்றவர் காயமடைந்தார்.

கம்பஹாவின் மிரிஹானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வல பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே பகுதியைச் சேர்ந்த சஜித் மதுசங்க (வயது 34) என்பவரே உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார் இவர் உயிரிழந்தவரின் உறவினர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரும் இவர்களின் உறவினராவார். இவர்களிடையே ஏற்பட்ட தர்க்கமே வாள்வெட்டில் முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபரை பொலிஸார் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தாமரை கோபுரத்தின் பெயரை மாற்ற முயற்சி?

கொழும்பு, ஏப். 24

தாமரை கோபுரத்தின் பெயரிலிருந்து "தாமரை" என்ற சொல்லை நீக்கி, அதன் பெயரை "கொழும்பு கோபுரம்" என மாற்றுவதற்கான பிரேரணை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயரமான கோபுரத்துக்கு தாமரை கோபுரம் என்ற பெயர் ஏற்புடையதல்ல என்ற கருத்தும் இந்த பெயரை மாற்றக் காரணமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த கோபுரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சீனாவின் அனுசரணையில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய ரயில் பாதை விரைவில் நிர்மாணம்!

## போக்குவரத்து அமைச்சர் உறுதி

நுவரெலியா, ஏப். 24

நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து நுவரெலியா மற்றும் ராகலை வரை பயணிக்ககூடிய புதிய ரயில் பாதை வெகுவிரைவில் நிர்மாணிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நுவரெலியாவுக்கு நேற்று வந்த அமைச்சர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மேலும், நுவரெலியா நகருக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தொடருந்து சேவை தேவையாக உள்ளது. எனவே, மத்திய மாகாண ஆளுநர் காலத்தில் செயல்பட்ட நுவரெலியா - கந்தபளை ரயில் நிலையங்களுக்கு இடையில் தொடருந்து சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக புதிய ரயில் பாதை




யும் நிர்மாணிக்கப்படும்.

நுவரெலியாவில் இருந்து கொழும்பு வரை மரக்கறிகளை கொண்டு வருவதற்கு நானுஓயா ரயில் நிலையத்தை மையப்படுத்தி பொருளாதார மத்திய நிலைய பிரிவொன்று அமைக்கப்படும்" எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை, நானுஓயா ரயில் நிலையத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர், நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து எல்லவரை செல்வதற்கு காத்திருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் நட்பு ரீதியில் கலந்துரையாடினார். தொடருந்து நிலைய அதிகாரிகளையும் சந்தித்துளார். (ஐ)

# இரத்தினபுரியில் தமிழ் சிறுமி மர்மமான முறையில் மரணம்!

கொழும்பு, ஏப். 24

இரத்தினபுரியில் தமிழ் சிறுமி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

ரம்புக்கந்தை தோட்டத்தை சேர்ந்த தரம் 11இல் கல்வி கற்கும் கணேசன் ருச்ஷானி (வயது 15) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த மாணவி தனது வீட்டில் போதிய வசதிகள் இல்லாததால் அருகிலுள்ள அத்தையின் (தந்தையின் தங்கை) வீட்டிலேயே உறங்குவது வழமை.

வழக்கம் போன்று அங்கு உறங்கியவர் தனது அத்தையிடம் அதிகாலை தண்ணீர் கேட்டு அருந்து விட்டு மீண்டும் நித்திரையில் ஆழ்ந்துள்ளார்.

அதிகாலை 5 மணியளவில் அத்தையும் வீட்டாரும் நித்திரை விட்டெழுந்து பார்த்த போது மாணவி வெறுந்தரையில் கிடந்துள்ளார்.

இது குறித்து பெற்றோருக்கு அறிவித்ததுடன், உடனடியாக இரத்தினபுரி ஆதார மருத்துவமனைக்கு மாணவி கொண்டு செல்லப்பட்டார். மாணவியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தனர்.

மாணவியின் மரணம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மாணவியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தனர்.

மாணவியின் இறப்புக்கான காரணத்தை கண்டறிய பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# 12 வருடங்களுக்கு பிறகு இந்தியா வரும் பாகிஸ்தான் அமைச்சர் பிலாவல் பூட்டோ!

வினீத் கரே




அடுத்த மாதம் கோவாவில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ ஸர்தாரி இந்தியா வரவுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

எஸ்சிஓ என்பது பிராந்தியத்தின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட பல்வேறு நாடுகளின் கூட்டமைப்பாகும். இது ஜூன் 2001இல் ஷாங்காயில் உருவாக்கப்பட்டது. ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இதன் உறுப்பு நாடுகளாகும்.

மே 4 மற்றும் 5ஆம் திகதிகளில் இந்தியாவின் கோவாவில் நடைபெறும் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் பங்கேற்பது குறித்தும் எஸ்சிஓ சாசனம் மற்றும் அதன் முறைகள் குறித்தும் இப்பிராந்தியத்தில் பாகிஸ்தான் வெளியுறவு கொள்கைக்குத் தொடர்ந்து அளித்து வரும் முன்னுரிமை பாகிஸ்தானின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் ஒரு ட்வீட்டில் தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டில் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்தியா வந்த பிறகு பாகிஸ்தான் தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உறவு நீண்ட காலமாக மோசமடைந்தே உள்ளது. 2019-ம் ஆண்டு புல்வாமா தாக்குதலில் 40 இந்திய வீரர்கள் உயிரிழந்ததை அடுத்து, பாலகோட்டில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.

ஆகஸ்ட் 2019 இல், ஜம்மு காஷ்மீரில் இருந்து சட்டப் பிரிவு 370 ஐ நீக்கும் மோடி அரசாங்கத்தின் நடவடிக்கையை பாகிஸ்தான் கடுமையாக எதிர்த்தது, தொடர்ந்து, இந்தியாவுடனான வர்த்தகத்தை நிறுத்தியது.

டிசம்பர் 2022 இல் நியூயார்க்கில், பிலாவல் பூட்டோ ஸர்தாரி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் குஜராத்தைப் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதும் இந்தியா அதைக் கடுமையாக எதிர்த்தது என்பதும் நினைவிருக்கலாம்.

பிலாவல் பூட்டோ மற்றும் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆகியோர் பிரதமர் மோடியை நோக்கித் தொடர்ந்து கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இருப்பினும் சமீபத்திய பேட்டியில் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் பேச்சுவார்த்தை மூலம் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த உத்தேச பயணம் குறித்த செய்தியாளர் சந்திப்பில், இந்திய வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்ஷி, ‘எஸ்சிஓ தலைமையின் கீழ், அனைத்து எஸ்சிஓ உறுப்பு நாடுகளையும் வருமாறு நாங்கள் அழைத்துள்ளோம். மே 4-5 திகதிகளில் கோவாவில் இந்தக் கூட்டம் கூடவுள்ளது.

இந்தக் கூட்டம் மிகவும் வெற்றிகரமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எந்த ஒரு நாட்டின் பங்கேற்பு குறித்தும் கவனம் செலுத்துவது பொருத்தமாக இருக்காது.” என்று குறிப்பிட்டிருந்தார்.

பிலாவல் பூட்டோவின் உத்தேச இந்திய விஜயம் பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடி மற்றும் உள்நாட்டு அரசியல் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில் நடக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பிலாவலின் இந்திய பயணத்தின் சமிக்ஞை

பாகிஸ்தான் பாதுகாப்பு நிபுணர் ஆயிஷா சித்திக்கா, நியூயார்க்கில் தனது சர்ச்சைக்குரிய அறிக்கையைத் தொடர்ந்து பிலாவல் பூட்டோவின் இந்த உத்தேச பயணத்தை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ‘முற்போக்கான நடவடிக்கை” என்று விவரித்தார். பாகிஸ்தானின் பாதுகாப்பு நிபுணர்களும் முன்னாள் தூதர் ஆசிப் துரானியும் அதை வரவேற்றனர்.

‘நீங்கள் எங்களை அவதூறாகப் பேசினீர்கள், நாங்களும் உங்களைப் பேசினோம். ஆனால் நாங்கள் எஸ்சிஓ மன்றத்தில் உரையாற்ற விரும்புகிறோம். இப்போது நீங்கள் எங்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பது உங்கள் கையில் தான் இருக்கிறது,” என்று பூட்டோ கூற விரும்புகிறார்” என்கிறார் ஆயிஷா சித்திக்கா.







ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழின் வெளிநாட்டு ஆசிரியரும் பாகிஸ்தானைச் சேர்ந்த நிருபருமான ரசாவுல் ஹசன் லஸ்கர், ‘மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, பாகிஸ்தானின் தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு வருகிறார். இதுவே முக்கியமானது. அவர் இந்தியாவில் இருப்பது, பேச்சுவார்த்தைக்கான கதவு தானாகவே திறக்கப்படுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பு,” என்கிறார்.

### பாகிஸ்தானின் ராஜதந்திரம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தான், ஐஎம்எப், சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியா போன்ற நாடுகளின் கதவுகளைத் தட்டி உதவி கேட்டு வருகிறது.

இது தவிர, சில நாட்களுக்கு முன்பு நியூயார்க்கில் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகச் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட பிலாவல் இப்படிப்பட்ட நேரத்தில் இந்தியா வருவது ஏன்?

இந்தியா-பாகிஸ்தான் இடையேயான இப்படிப்பட்ட தீவிரமான கருத்துகள் சாதாரணமாகவே நிலவி வருபவை தான் என்கிறார் பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்தியத் தூதர் ஷரத் சபர்வால்,

‘இரு தரப்புக்கும் சம பலன்கள் என்ற பேச்சு வரும் போது, இது போன்ற தீவிரக் கருத்துகள் அடங்கிப் போகும். கடந்த காலங்களில் பல கூரிய சொற்கள் பகிரப்பட்டிருந்தாலும், அதையும் மீறி, நேரம் வரும்போது பேச்சுவார்த்தை முன்னேறி வந்துள்ளது.” என்றார்.

எஸ்சிஓ கூட்டத்தில் பாகிஸ்தான் பங்கேற்பது குறித்து இந்திய ஊடகங்களில் நீண்ட நாட்களாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்தியத் தூதர், “கோவாவில் எஸ்சிஓ வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு முக்கியமானது, பாகிஸ்தான் அங்கு தனது இருப்பைப் பதிவு செய்ய விரும்புகிறது. பாகிஸ்தான் தனது இடத்தை விட்டு வெளியேற விரும்புமென்றோ இந்த அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று ஒரு செய்தியை வெளியிட விரும்புமென்றோ நான் கருதவில்லை” என்று கூறுகிறார்.

### ராணுவத்துக்கும் உடன்பாடு உண்டா?

பாகிஸ்தானைச் சேர்ந்த நிருபர் ரசாவுல் ஹசன் லஸ்கர் கூறுகையில், ‘எஸ்சிஓவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள், பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டங்களில் பாகிஸ்தான் பங்கேற்கும் என்று தெளிவாக முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், இந்தச் சந்திப்புகள் ஆன்லைனில் நடக்குமா நேரில் நடக்குமா என்பது தெளிவாகத் தெரியாமல் இருந்தது. இதில் பிலாவல் பூட்டோ ஸர்தாரி பங்கு பெறுவாரா அல்லது ஹினா ரப்பானி கார் பங்கு பெறுவாரா என்பதும் முடிவு செய்யப்படாமல் இருந்தது.’ என்றார்.

ஆனால், இப்போது ஸர்தாரியின் வருகை உறுதியானது, இந்தக் குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இருப்பினும் பெயர் குறிப்பிட விரும்பாத பாகிஸ்தான் பாதுகாப்பு நிபுணர் ஒருவர், கூட்டத்தில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்த தனது முடிவை மறு பரிசீலனை செய்ய பிலாவல் அறிவுறுத்தப்படலாம் என்று கூறினார்.

வெளியுறவு அமைச்சகத்தின் ட்வீட், பூட்டோ, எஸ்சிஓ கூட்டத்தில் பங்கேற்க விரும்புவதையும் அவர் தனது அமைச்சகத்தை சுதந்திரமாக நடத்த விரும்புவதையும் இந்தியாவுடன் சிறந்த உறவை விரும்புவதையும் காட்டுகிறது. இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட வேண்டியது தான் பாக்கி என்றும் கூறுகிறார்.

ஆனால், ஆயிஷா சித்திகா இந்த வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. பிலாவல் பூட்டோவின் இந்தியா வருவதற்கான முடிவு அவருடையதாக மட்டும் இருக்காது என்பது அவரது கருத்து.

“யார் வருவது என்ற முடிவை ஒன்றாக அமர்ந்து தான் எடுத்திருக்க வேண்டும். அறிவுரைகள் பெறப்பட்டிருக்கும். முறைப்படி தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கும். இது பிலாவல் பூட்டோ மட்டும் எடுத்த முடிவாக இருக்க முடியாது. இதில் பிரதமரும் ஈடுபட்டிருப்பார், ராணுவமும் ஈடுபட்டிருக்கும்” என்றார் அவர்.

பாகிஸ்தானுக்கான முன்னாள் இந்தியத் தூதர் ஷரத் சபர்வால், “பேச்சுவார்த்தைக்குப் பிறகுதான் பிலாவல் பூட்டோவின் இந்திய வருகை குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் ட்வீட் செய்திருக்க வேண்டும்.” என்றார்.

### இரு தரப்பு பேச்சுக்கான வாய்ப்புகள்?

பாகிஸ்தானில் அந்நிய செலாவணி கையிருப்பு அபாய கட்டத்தில் உள்ளது. பொருளாதாரமும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எண்ணெய், உணவுப் பொருட்கள் போன்றவற்றின் விலைகள் வேகமாக அதிகரித்து, டாலருக்கு எதிராக பாகிஸ்தான் ரூபாய் தொடர்ந்து பல வீனமடைந்து வருகிறது. பாகிஸ்தானின் இந்த நிலைக்கும் பூட்டோவின் வருகைக்கும் தொடர்பு இருக்கக்கூடுமா?

பாதுகாப்பு நிபுணரும் பாகிஸ்தானின் முன்னாள் தூதருமான ஆசிப் துரானி, ‘பாகிஸ்தான் உதவிக்காக இந்தியாவைச் சார்ந்திருக்கவில்லை. எங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியா உதவ முடியாது, இந்தியாவும் உதவும் எண்ணத்தில் இல்லை, அத்தகைய முயற்சியையும் எடுக்கவில்லை.” என்றார்,

இந்த விஜயத்தின் அறிவிப்புக்குப் பிறகு, இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு உள்ளதா என்ற ஊகங்களும் தொடங்கியுள்ளன.

ஒரு செய்தியாளர் கூட்டத்தில், இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்ஷி, இரு தரப்பு பேச்சு குறித்து எதையும் இப்போது கூற முடியாது என்று கூறினார்.

“இப்போது இது குறித்துப் பேசுவது வெறும் ஊகங்களாகத் தான் இருக்கும், குறிப்பாக, பாகிஸ்தானின் உள்நாட்டு அரசியல் சூடு பிடித்து, முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தொடர்ந்து ஷாபாஸ் ஷெரிப் அரசுக்குச் சவால்களை விடுத்துவரும் நேரத்தில்,” என்று ஷரத் சபர்வால் கூறுகிறார்.

ஷரத் சபர்வால் கூறுகையில், ‘தேர்தலுக்குப் பிறகுதான் பாகிஸ்தானில் நிலைமை மேம்படும். அப்படிப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையையும் (இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் போன்ற) அவர்கள் இப்போது எடுக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்.” என்றார்.

ஆயிஷா சித்திக்காகா, “இந்த உத்தேசப் பயணம்பாகிஸ்தானின் அரசியலில் என்ன நடக்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல், பாகிஸ்தான் அரசாங்கம் தனது சொந்த நலனுக்காகவும், உறவை மேம்படுத்தவும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளது என்பதற்கான சமிக்ஞை” என்கிறார்.

“பேச்சுவார்த்தையைக் குறித்துச் சிந்திப்பதற்கு இன்னும் காலம் கனியவில்லை. பாகிஸ்தான், பந்தை இந்தியாவின் கோர்ட்டில் போட்டுவிட்டு, உங்கள் கோபத்திற்கு அப்பாற்பட்ட நிலைப்பாட்டை எடுக்க முடியுமா என்று கேட்கிறது”

ஆசிப் துரானி, ‘இது இருதரப்பு விஜயம் இல்லை என்றாலும், பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் இருக்கலாம். இந்தியா இவ்வளவு பெரிய நாடு, இந்தியாவின் இதயம் எவ்வளவு பெரியது, அது எவ்வாறு முன்னோக்கி வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.” என்கிறார். (பிபிசி)

# அரசியலில் தந்திரோபாயம் என்பது - விரும்பியது கிடைக்கும் வரையில் கிடைத்ததை விரும்புவதாகும்!

யதீந்திரா

தமிழில் ஒரு கூற்றுண்டு. அதாவது, கழுதை தேய்ந்து கட்டெறும்பானது. தமிழர்களின் அரசியலும் இன்று அப்படியானதொரு நிலையில்தான் இருக்கின்றது. ஆரம்பத்தில் சமஸ்டி, அதிலிருந்து தனிநாடு, பின்னர் மீண்டும் சமஸ்டி. ஆனால் தமிழர் அரசியலின் உண்மையான நிலைமையோ, மாகாண சபையை முழுமையாக பயன்படுத்த முடிந்தாலே, போதுமானதென்னும் நிலையில்தான் இருக்கின்றது. அதாவது, பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள் என்று கூறுவதற்கு ஒப்பானது. ஆனால் இந்த உண்மையை வெளிப்படையாக கூறும் துணிவு பலரிடம் இல்லை. வாக்குகள் பறிபோய்விடுமோ - என்று அச்சப்படும் அரசியல்வாதிகளால், சில விடயங்களை பகிரங்கமாக கூற முடியாமையை விளங்கிக்கொள்ளலாம், ஆனால், கருத்துருவாக்கங்களை செய்யும் அரசியல் சிந்தனையாளர், பத்திரிகையாளர் மற்றும் சமூகமட்டத்தில் மதிக்கப்படும் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரும் மதில் மேல் பூனைகளாக இருப்பதுதான் துரதிஸ்வடசமானது. இளைய தலைமுறையை வழிநடத்துவதில் இவர்களுக்கே தலையாய பொறுப்புண்டு. ஆனால் அவர்களோ தொடர்ந்தும் நடைமுறைச் சாத்தியமற்ற கதைகளையே பெருமைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஈழத் தமிழ் தலைமைகளுக்கு போதுமான அரசியல் அனுபமுண்டு. இந்த அனுபவத்திலிருந்து சிந்தித்தாலே போதுமானது. ஆனால் அதற்கு பலரும் தயாராக இல்லை. இலங்கை தமிழரசு கட்சியின் ஆங்கிலப் பெயர் சமஸ்டிக் கட்சி. அதாவது, சமஸ்டியை அடைவதுதான் தமிழரசு கட்சியின் இலக்கு. இந்த பின்புலத்தில் நோக்கினால், கடந்த 74 வருடங்களாக தமிழ் அரசியல் கட்சிகள் சமஸ்டி தொடர்பில் பேசிவருகின்றன. ஆனால் அடைய முடிந்ததா? கடந்த 74 வருடங்களில் ஏராளமான அரசியல் ஆளுமைகளையும், அவர்களின் அரசியல் நகர்வுகளையும் நாம் கண்டிருக்கின்றோம். ஆனாலும் எதனையும் தமிழ் கட்சிகளால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், கடந்த 74 வருட கால அரசியல் வரலாற்றில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மாகாண சபை ஒன்றுதான் நீடித்து நிலைத்திருக்கின்றது.

அன்றைய சூழலில் ஆயுத விடுதலை இயக்கங்களில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒன்றுதான், மாகாண சபையை பொறுப்பேற்று நடத்திக் கொண்டு, அதிலிருந்து முன்னேற்றலாமென்னும் நிலைப்பாட்டை கொண்டிருந்தது. இந்தியாவின் ஆதரவுடன் அதனை சாத்தியப்படுத்த முடியுமென்று அவர்கள் உறுதியாக நம்பினர். ஆனால் 1989இல், பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றதை தொடர்ந்து, நிலைமைகள் தலைகீழாகின. இந்தியாவை தமிழர் பிரச்சினையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்பதில் விடுதலைப் புலிகளும் பிரேமதாசவும் உடன்பட்டுக் கொண்டதன் பின்புலத்தில், இந்தியா வெளியேற்றப்பட்டது. இந்தியாவின் வெளியேற்றம் என்பது, அன்றைய சூழலில் யதார்த்தபூர்வமான அணுகுமுறைகள் அனைத்துக்குமான முற்றுப்புள்ளியாகும்.

விடுதலைப் புலிகளின் நம்பிக்கை வேறொன்றாக இருந்தது. அதனை அடைய முடியுமென்று அவர்கள் நம்பினர். விடுதலைப் புலிகள் தாங்கள் நம்பிய ஒன்றுக்காக அர்ப்பணிப்புடன் இயங்கினர். அதன் மீது மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒரு விடயத்திற்காக உயிரை கொடுத்துக் கொண்டிருக்கும் போது, மக்கள் இயல்பாகவே அதன் பக்கமாகத்தான் இருப்பர். உயிரைகொடுப்பதற்கு சித்தமாக இருப்பவர்கள் கூறுவதைத்தான் சரியென்று நம்புவர். அதுதான் அன்றைய சூழலில் இடம்பெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு கூறிய உண்மைகளை அன்று செவிமடுக்க எவரும் தயாராக இருக்கவில்லை.

நான் ஒரு முறை வன்னியில் நின்று கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் என்னிடம் இவ்வாறு கூறினார். அதாவது, அண்ணன், நாங்கள் இன்றைக்கும் பலமாக இருக்கின்றோம் என்றால், அதற்கு எங்களுடைய தலைவர்தான் காரணம். அவருடைய முடிவுகள் பிழையென்றால் நாங்கள்

> **சில யதார்த்தங்கள் நமக்கு பிடிக்காமல் இருக்கலாம், ஆனால், அவைகள் யதார்த்தம் என்பதை நம்மால் புறக்கணிக்க முடியாதது என்பதே, அந்த யதார்தத்தின் யதார்த்தமாகும்.**

அழிந்தல்லவா போயிருப்பம் என்றார் அந்த உறுப்பினர். நான் அதனை சரியென்றே ஏற்றுக்கொண்டேன். ஏனெனில் அவர் கூறியது தர்க்கரீதியில் சரியாகத்தான் இருந்தது. ஏனெனில் அன்று விடுதலைப் புலிகள் பலமாக இருந்தனர். ஆனால் அந்த தர்க்கத்தை முன்வைத்து இன்று வாதிட முடியுமா? 2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்புலத்தில், அதுவரையான நமது நம்பிக்கைகளும், அரசியல் புரிதல்களும், நிலைப்பாடுகளும் தோற்றுவிட்டன. இந்த பார்வையிலிருந்து சிந்தித்தால், இன்றைய சூழலில் மதில் மேல் பூனையாக இருக்க வேண்டியதில்லை. இன்றைய யதார்த்தங்களை நிமிர்ந்து எதிர்கொள்ள முடியும். ஆனால் பிரச்சினையோ இப்போதும் நம்மில் பலர், விடயங்களை கூனிக்குறுகியே எதிர்கொள்ள முற்படுகின்றனர். அரசியல் யதார்த்தங்களை கண்டு பயந்து நடுங்குகின்றனர். பலருக்கு சுயவிமர்சனம் என்னும் சொல்லை கேட்டவுடனே, கை உதறுகின்றது. நாங்கள் அனைத்திலும் சரியென்றால் பின்னர் எவ்வாறு இவ்வாறனதொரு கோவண நிலை ஏற்பட்டது?

அரசியல் என்பது சூழ்நிலைகளை கையாளும் கலையாகும். சூழ்நிலைகள் நமது விருப்பங்களுக்கு அமைவாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை. அதே போன்று அனைத்து விடயங்களிலும் நம்மோடு ஒத்துப்போபவர்கள், நமக்கு முன்னால் இருக்கப் போவதில்லை. ஆனால் நாமோ, நமக்கு விரும்பமில்லாத சூழலுடனும், பல சந்தர்பங்களில் நமக்கு விருப்பமில்லாத நபர்களுடனுமே பணியாற்ற வேண்டியிருக்கும். அரசியலில் இந்த நிலைமை எப்போதுமே தவிர்க்க முடியாதது. இதன் காரணமாகத்தான் இந்தக் கட்டுரையாளர், எப்போதும் தந்திரங்களை முதன்மைப்படுத்தும் எழுத்தாளராக இருக்கின்றார்.

ஏனெனில் அரசியல் என்பது முற்றிலும் துறந்தவர்களின் பயணமல்ல. முற்றிலும் துறந்தவர்களுக்கே அரசியல் இருக்கும் காலம் இது. எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கான இலாபங்களை அடைவதற்கான கடைகளை திறக்கும் நோக்குடன்தான், நமது சூழலுக்குள் கால் வைப்பர். அவர்களுக்கான இலாப நட்டக் கணக்கின் அடிப்படையில்தான், அனைத்தையும் முன்னெடுப்பர். இது ஒரு அரசியல் யதார்த்தம். இந்த இடத்தில் ஒரு கேள்வி முன்வைக்கப்படலாம். அப்படியானால் அவர்களுடன் நாங்கள் எதற்காக பேச வேண்டும்? நாங்கள் சுயாதீனமாக செயற்படலாம்தானே. இது பற்றி கவிதையெழுதலாம். அந்தளவுதான் இதன் பெறுமதி. இந்த உலக அரசியல் ஒழுங்கில் சுயாதீனம் என்று எதுவுமில்லை. இன்று நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், ஏனைய நாடுகளிடம்தான் கையேந்த வேண்டும். அவ்வாறு உதவுகின்ற நாடுகள் தங்களுக்கான நலன்களையும் நிறுத்துப் பார்க்க முற்படும். நேரடியாவோ அல்லது மறைமுகமாவோ! பொருளாதார மீட்சில் சுயாதீனம் பற்றி பேசமுடியுமா?

அரசியலும் அப்படித்தான். உண்மையில் அரசியல்தான் அனைத்தினதும் தாய். அரசியலில் எவரும் சுயாதீனமாக இருக்க முடியாது. தமிழ் ஆயுத இயக்கங்கள் எப்போது, தங்களின் இராணுவ ஆற்றலை பெருக்கிக்கொள்ள வெளியாரிடம் உதவிகளை பெற்றார்களோ, அப்போதே அன்னிய தலையீடுகள், நமது அரசியலுக்குள் நுழைந்துவிட்டன. அதனை தடுக்கவும் முடியாது. ஆனால் இவ்வாறான சூழலை எவ்வாறு நமக்கு அதிகம் சேதமில்லாமல் சமாளிக்க முடியுமென்பதுதான் கேள்வி. அவ்வாறு சமாளிப்பதில்தான் நமது கெட்டித்தனம் தங்கியிருக்கின்றது.

இந்தியாவின் நலன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டாலும் கூட, கணிசமான அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில், இந்தியா, உறுதியான ஈடுபாட்டை காண்பித்தது. அதற்காக தமிழர்கள் கேட்கும் அனைத்தையும் இந்தியா பெற்றுக்கொடுக்க முடியாது. இப்போதும் நம்மில் சிலர், இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை அழுத்தக் கூடாது என்கின்றனர். இவ்வாறு கூறுபவர்களிடம் இந்தியா தொடர்பில் தெளிவான பார்வையில்லை அல்லது அதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டவாறு இந்தியா ஈழத் தமிழர்களின் வேலையாள் அல்ல. நீங்கள் வா என்றால் வருவதற்கும - போ என்றால் போவதற்கும். இந்தியா ஒரு பிராந்திய சக்தி. ஒரு பக்தன் கடவுளிடமிருந்து கருணையை எதிர்பார்ப்பது போன்ற பக்குவத்துடன்தான், பலம்பொருந்திய நாடுகளை அணுக வேண்டும். பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். நிலைமைகள் மாறும் வரையில் காத்திருக்க வேண்டும். வாய்ப்புக்கள் வரும்போது, அதனை பயன்படுத்திக் கொள்வதற்கான தயார்படுத்தல்களோடு இருக்க வேண்டும். விரும்பும் ஒன்று கிடைக்கும் வரையில் கிடைத்ததை விரும்ப வேண்டும். இதுதான் அரசியிலுக்கான சூத்திரம். இந்தச் சூத்திரத்தை புரிந்து கொண்டால் ஒரு பொல்லாப்புமில்லை.

இலங்கையை மையப்படுத்தி வெளியாரின் தலையீடுகளின் எல்லையை எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டும்? உண்மையில், இலங்கையை மையப்படுத்திய அனைத்து வெளித் தலையீடுகளும், இலங்கை அரசை மையப்படுத்தியதாகவே இருக்கின்றது. ஹிட்லரின் நாசி பிரச்சார அமைச்சர் கூறியது போன்று, ஒரு பொய்யை திரும்பத் திரும்ப கூறினால், அது உண்மையென்று நம்பப்படும் என்பது போல், நம்மில் சிலரும் சில விடயங்களை தவறாக முன்வைக்கின்றனர். அதனை தொடர்ந்தும் கூறுகின்ற போது, அதனை மக்களும் உண்மையென்று எண்ணிக்கொள்ளலாம். இலங்கையை மையப்படுத்தி வெளிநாடுகளின் நகர்வுகள் அனைத்துமே அரசை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கின்றது. நிச்சயமாக தமிழ் மக்களை கருத்தில் கொண்டு அவர்களது அணுகுமுறைகள் இருக்கவில்லை. இந்தியாவின் அணுகுமுறையில் மட்டுமே தமிழ் மக்களுக்கு பிரத்தியேக இடமுண்டு. வெளியாரின் முதலாவது கரிசனை சிங்கள பெரும்பான்மையினை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கின்றது. ஏனெனில் சிங்கள பெரும்பான்மையை விரோதித்துக் கொண்டால், அவர்களது நலன்களை இலங்கைத் தீவில் முன்னெடுப்பது கடினமாகும். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையை ஒரு நட்பு நாடாக கருதும் அணுகுமுறையே அனைவரிடமும் இருக்கின்றது. ஒரு நட்பு நாட்டின் மீது ஒரு கட்டத்திற்கு மேல் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. பாக்கிஸ்தானை உடைத்தது போல், இலங்கைத் தீவை உடைப்பதற்கு இந்தியா உதவுமென்னும் பார்வையொன்று, ஒரு காலத்தில் இருந்தது. செல்வநாயகம் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்தமைக்கு பின்னாலும் அப்படியொரு காரணம் இருப்பதாகவும் ஒரு பார்வையுண்டு. செல்வநாயகம் தொடர்பான ஏ.ஜே.வில்சன் எழுதிய சுயசரிதையில் கூறப்பட்டிருக்கும் சில தகவல்கள் அவ்வாறான பார்வைக்கு வலுச் சேர்க்கின்றது. ஆனால் பாக்கிஸ்தான் வேறு இலங்கை வேறு என்பதுதான் உண்மை. இலங்கைத் தீவின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டுமென்னும் நோக்கமே அன்றிருந்து. அதுவே இன்று வரையில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடாக இருக்கின்றது. ஆனால் இந்தியாவின் நேரடியான தலையீட்டுக் காலத்தில், இந்திராகாந்தியின் ஆலோசகராகவும் இலங்கை விவகாரங்களுக்கான விசேட பிரதிநிதியாகவும் இருந்த, பர்த்தசாரதி, அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் ஒரு விடயத்தை தெளிவாக கூறியிருந்தார். அதாவது, இந்தியா ஒரு போதும் தனிநாட்டை ஆதரிக்காது அத்தோடு அதனை அனுமதிக்கவும் மாட்டாது.

உள் தகவல்களின் படி, பார்த்தசாரதி முதல் முதலாக கொழும்பிற்கு வருகின்ற போது, சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வு யோசனையுடன்தான் வந்திருக்கின்றார். ஆனால் கொழும்பில் நின்ற நாட்களில், அவரது பார்வை முற்றிலும் மாறிவிட்டது. சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ராஜதந்திரிகள், புத்திஜீவிகள் பலரோடு பேசியதைத் தொடர்ந்து, சமஸ்டித் தீர்வை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களை அவர் புரிந்துகொண்டார். இதனைத் தொடர்ந்துதான், இந்தியாவின் மானில முறைமையிலான தீர்வை முன்வைக்கும் திட்டத்தை இந்தியா கையிலெடுத்தது.

அந்த அடிப்படையில் வந்ததுதான் இன்றுவரையில், இலங்கையில் நிலைத்து நிற்கின்றது. நமக்குள் பேசுபொருளாக இருக்கின்றது. நமக்குள் எவ்வாறான விவாதங்கள் இருந்தாலும் கூட, அதனை தாண்டி நம்மால் பயணிக்க முடியவில்லையென்பதுதான் உண்மையானது. இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே ஏழை தமிழ் மக்களுக்கு விமோசனமுண்டு. மாகாண சபையை விட்டால் ஈழத் தமிழர்களுக்கு வேறு வழியில்லை, ஆனால், அதனைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்துவற்கே இந்தியாவின், மேற்குலகத்தின் அழுத்தங்கள் தேவைப்படுகின்றது. இதுதான் இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தம். சில யதார்த்தங்கள் நமக்கு பிடிக்காமல் இருக்கலாம், ஆனால், அவைகள் யதார்த்தம் என்பதை நம்மால் புறக்கணிக்க முடியாதது என்பதே, அந்த யதார்தத்தின் யதார்த்தமாகும். ●

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் சலுகைகளை இலங்கை இழக்கும்!

## சர்வதேச ஊடகங்கள் தகவல்

கொழும்பு, ஏப். 24

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் உள்ளடக்கங்கள் காரணமாக ஜி. எஸ். பி. பிளஸ் வர்த்தக சலுகைகளை இலங்கை இழக்கும் அபாயம் உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் துணை நிர்வாக இயக்குநர் பாவ்லா பாம்பலோனி, புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்த கவலைகளை வெளிப்படுத்தி உள்ளத்துடன் வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

புதிய சட்டமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அமெரிக்கா தனது அதிருப்தியை வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்கவிடம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் மாற்றப்படாவிட்டால், வர்த்தக உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தனவிடம் இங்கிலாந்து அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் சில பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க ஆகியோருடன் கடந்த வாரம் கொழும்பில் நடத்தியுள்ள சந்திப்பில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்து தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகைகள் தொடர்பான முடிவுகளில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் உள்ளடக்கம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் இலங்கையில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் என பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. பயங்கரவாத தடுப்பு சட்டத்தை விட புதிய சட்டம் மிகவும் கொடூரமானதாக உள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)

# ஹர்த்தால் போராட்டத்துக்கு பிரான்ஸ் அமைப்பும் ஆதரவு

பாரிஸ், ஏப். 24

நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு, கிழக்கில் நடைபெறவிருக்கும் ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவை தெரிவிக்கிறோம். அத்துடன், மற்றைய புலம்பெயர் அமைப்புகள் எந்த வேறுபாடுகளுமின்றி ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு தெரிவிக்குமாறும் பிரான்ஸ் தமிழர் மனிதர் உரிமை மையம் கேட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பின்பேரில் நாளைய தினம் இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஹர்த்தாலை முன்னின்று நடத்தும் அத்தனை கட்சிகள், சங்கங்கள் யாவருக்கும் எமது சிநேகபூரமான நட்பையும் ஆதரவையும் தெரிவிக்கும் அதேவேளை, உங்கள் இது போன்ற பணிகள் தொடர வேண்டுமென தாழ்மையாக வேண்டி கொள்கிறோம்.

நாட்டில் வாழும் எமது உறவுகள் எந்த பாகுபாடுமின்றி இந்த ஹர்த்தாலில் பங்கு கொண்டு - மிகப்பெரிய வெற்றியை சிங்கள - பௌத்த அரசுக்கு காண்பிக்குமாறு உங்களை உரிமையுடன் வேண்டுகிறோம் - என்றுள்ளது. (ஐ)

# தமிழ் உறவுகள் ஹர்த்தாலை வெற்றியடைய செய்யுவேண்டும்!

## பிரித்தானிய இந்துக் கோயில்கள் சங்கங்கள்

லண்டன், ஏப். 24

எமது தமிழ் உறவுகள் எந்த பாகுபாடுமின்றி ஹர்த்தாலில் பங்கேற்று மிகப்பெரிய வெற்றியடைய செய்ய வேண்டும் என்று பிரித்தானிய இந்துக் கோயில்கள் சங்கங்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பிரித்தானிய இந்துக் கோயில்கள் சங்கங்கள் ஆகிய நாம் நாளை செவ்வாய்கிழமை வடக்கு, கிழக்கில் நடைபெறவிருக்கும் ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவை தெரிவித்து கொள்கிறோம்.

அத்துடன், மற்றைய புலம்பெயர் அமைப்புகளும் எந்த வேறுபாடுகளுமின்றி, இந்த ஹர்த்தாலுக்கு முழு ஆதரவை தெரிவிக்குமாறும் கேட்டுள்ளது.

மேலும், ஹர்த்தாலை முன்னின்று நடத்தும் அத்தனை கட்சிகள், சங்கங்களுக்கும் நட்பையும் - ஆதரவையும் வெளிப்படுத்தும் அதேநேரம், எமது தமிழ் உறவுகள் எந்த பாகுபாடுமின்றி ஹர்த்தாலில் பங்கேற்று மிகப்பெரிய வெற்றியடைய செய்யுமாறும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் முக்கியம்!

## ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 24

நாட்டின் அபிவிருத்திக்கும் நாட்டை உலகத்தில் முன் முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் பயங்கரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் எம்.பியுமான வஜிர அபேவர்த்தன, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது மிகவும் முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக சில அரசியல் குழுக்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் மாத்திரமன்றி உலகின் ஏனைய நாடுகளிலும் , பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறான சட்டங்கள் அமலாக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் உரிய முறையில் அமுல்படுத்தப்பட்டால் உலகுக்கு கடன் வழங்கும் நாடாக இலங்கையை மாற்ற முடியும் என்றும் கூறினார். (ஐ)








## தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவுக்காக சம்மாந்துறையில் விளையாட்டு விழா!

சம்மாந்துறை, ஏப். 24

தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் நோக்கில் சம்மாந்துறை கோரக்கர் வித்தியாலய மைதானத்தில், கலை - கலாசார நிகழ்வுகளும், சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழாவும் கோலாகலமாக நடைபெற்றன.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸில் நிதிப் பங்களிப்புடன், முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.முஹமத் ஹனீபா, சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் இளங்கோவன், பள்ளிவாசல் நிர்வாக சபையினர், விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலும், சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரு மாற்றத்தை நோக்கி குழுவினர் ஒழுங்கு செய்திருந்த காட்சிப்பலகையில் இந்நிகழ்வுக்கு வருகை தந்த பிரதம விருந்தினர்கள் மற்றும் பொதுமக்கள் தமது கையொப்பங்களை பதிவு செய்தனர். (ஐ)

## அக்கரைப்பற்று மருத்துவமனைக்கு மருத்துவ அத்தியட்சகர் பொறுப்பேற்பு



அக்கரைப்பற்று, ஏப். 24

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனைக்கு புதிய மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் ரீ. எஸ். ஆர். ரீ. ஆர். றஜாப் உத்தியோக பூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதில் மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் எம். எச். எம். சனூபர் கடந்த 3 மாதங்களாக கடமையாற்றிய நிலையில், சுகாதார அமைச்சினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள், மருத்துவமனை குழு உறுப்பினர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், மருத்துவ அதிகாரிகள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

றஜாப், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும், பொத்துவில் ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடையடைப்பு போராட்டம் நாளை; ஆதரவு கோரி கிழக்கில் பரப்புரை!

மட்டக்களப்பு, ஏப். 24

**தமிழர் தாயகப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுதல், புதிய பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை நடைபெறவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு ஆதரவு கோரி கிழக்கில் தீவிர பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.**



இந்நிலையில், " பயங்கரவாத எதிப்புச் சட்டம் ஒன்றை புதிதாக அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக செவ்வாய்க்கிழமை (நாளை) வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களும். தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி இந்த சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜனநாயக் போராளிகள் கட்சியின் உப தலைவர் நா. நகுலேஸ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி நகர் உள்ளிட்ட பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிர பரப்புரையில் ஈடுபட்டது. இதன்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கையில் நடைமுறையிலிருக்கின்ற பயங்கரவாத சட்டத்துக்கு மாற்றீடாக அரசாங்கம் புதிய சட்டத்தைக் கொண்டு வருகின்றது. இது தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத சட்டத்தைவிடவும் மிகவும் இறுக்கமான சட்டமாகக் காணப்படுகின்றது. புதிய சட்டத்தில் இராணுவம், மற்றும் பொலிஸாருக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் வடகிழக்கில் வர்கின்ற தமிழ் மக்கள் மென்மலும் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். தொலைபேசி, இணையத் தளங்களை முடக்குதல், தனி நபர்களைக் கைது செய்தல் போன்றனவும் நிகழும் தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி முஸ்லிம், மற்றும் சிங்கள மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறான சட்டங்களைப் பயன்படுத்தியே தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கல்களையும் மேற்கொண்டு வருகின்றார்கள். இதனை தமிழ் மக்களாகிய நாம் எதிர்க்க முடியாத நிலையில் அரசு இதனைக் கொண்டு வருகிறது. எனவே, இச்சட்டம் நடைமுறையில் வருவதற்கு அனைத்து இன மக்களும் ஆதரிக்கக்கூடாது. இதற்காக வேண்டி நாளை அனைவரும் தமது வர்த்தக நிலையங்களை மூடி ஹர்த்தால் அனுஸ்ட்டித்து எதிர்ப்புக்களை அரசுக்கு காட்டுமாறு வேண்டுகின்றோம் - என்றும் கோரப்பட்டது. (ஐ)

## முன்னறிவிப்பின்றி தண்ணீர் வெட்டு!

சாய்ந்தமருது, ஏப். 24

சாய்ந்தமருதில் எந்த முன்னறிவித்தலும் இன்றி, அடிக்கடி நீர் வெட்டு இடம்பெறுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் புனித நோன்பு காலமான ரமழானில் மிகுந்த இன்னல்களை அனுபவிப்பதோடு, உரிய நேரத்தில் செய்ய வேண்டிய கடமைகளைக் கூட சரியான நேரத்தில் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர். இது விடயத்தில் அதிகாரிகள் உரிய தீர்வைத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)



## வீடுகள் கையளிப்பும் அடிக்கல் நாட்டுதலும்!

சம்மாந்துறை, ஏப்.

நளீர் பௌண்டேஷன் அமைப்பின் 10ஆவது ஆண்டை முன்னிட்டு, வசதி குறைந்த தேவையுடைய மக்களுக்கு 10 வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், முதலாவது வீட்டை கையளிக்கும் நிகழ்வும் இரண்டாவது வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நளீர் பௌண்டஷன் ஸ்தாபகர் ஏ. எம். நளீரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், நளீர் பௌண்டேஷன் தலைவர் எம். ஏ. ரஹீம் தலைமையில் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய சிட்னி பிரதர்ஸ் நிதி அனுசரணையில், சாளம்பெங்கேணி நான்கில் அமைக்கப்பட்ட இந்த வீட்டை கையளிக்கும் நிகழ்விலும், சாளம்பெங்கேணி மூன்றில் அமைக்கப்பட உள்ள வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்விலும், அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே. எம்.ஏ. டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, வீட்டின் உரிமையாளர்களிடம் வீட்டை கையளித்தார்.

நிகழ்வின் கௌரவ அதிதியாக நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பீ. பிரணவரூபன், விசேட அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கே. றிஸ்வியஹசர் அவர்களும் கலந்து கொண்டார். (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பிள்ளையானுக்கும் தொடர்பு!

## விசாரிக்க வேண்டும் என்கிறார் சாணக்கியன்

மட்டக்களப்பு, ஏப். 24

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடன் பிள்ளையான் என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் தொடர்புள்ளது எனும் அசாத் மௌலானாவின் வாக்குமூலத்துக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக தமிழரசு கட்சி நடத்திய அஞ்சலி நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 30இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கடந்த நான்கு வருடங்களாக நாங்களும் இறந்த உறவுகளுக்கு நீதி வேண்டும், சதி செய்து கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும் என்று போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

ஒரு புறம் நாங்கள் அஞ்சலி செலுத்துவதாக இருந்தாலும் கூட, இது அரசியல் இலாபங்களுக்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு குண்டுத் தாக்குதல் என்பதை பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அண்மையிலே, அசாத் மௌலானா என்று அழைக்கப்படும் அவரின் முன்னாள் பேச்சாளர் இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னால் ராஜபக்ஷர்கள் இருந்ததாகவும், இந்தக் கொடூரமான செயலை செய்ததற்கு பின்னால் தற்போது இராஜாங்க அமைச்சராக இருக்கும் சிவனேசதுரை சந்திரகாந்தனும் தொடர்பு இருப்பதாக ஐ. நாவிலே அறிக்கை கொடுத்திருக்கின்றார். ஆனால், இவர்கள் இன்னும் சுதந்திரமாகவே நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள்" - என்றார். (ஐ)

# ஜேர்மனியை பழி தீர்க்கிறது ரஷ்யா!

மொஸ்கோ, ஏப். 24

உக்ரைன் போர் சூழலில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் அணி திரண்டன. அத்துடன் ஜேர்மனியும் கைகோத்துக் கொண்டது.

ரஷ்யாவுக்கு ஆதரவாக ஆயுதம் வழங்கக் கூடாது என பிற நாடுகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டபோதும் ஜேர்மனி கலந்து கொண்டது.

ரஷ்ய ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது என சீனாவுக்கும் எச்சரிக்கை விடுத்தது. இது ரஷ்யாவின் கவனத்துக்கும் சென்றது.

இதற்கிடையே, ஜேர்மனியில் இருந்து ரஷ்ய தூதரகத்தினர் பெருமளவில் வெளியேற்றப்பட்டனர். இதன் எதிரொலியாக, அதற்கு பழிக்கு பழி வாங்கும் நோக்கில்,



ரஷ்யாவும் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 5 ஆம் திகதி ரஷ்யாவில் உள்ள ஜேர்மனி தூதர் கிசா ஆண்ட்ரியாஸ் வான் கெய்ரிடம் அறிவிப்பு ஒன்றை விடுத்தது.

இதன்படி, ரஷ்யாவில் உள்ள ஜேர்மன் தூதரக பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளும்படி கூறியுள்ளது.

ஒட்டுமொத்த ரஷ்ய - ஜேர்மனி உறவுகளை தொடர்ந்து, பெரிய அளவில் அழிக்கும் வகையில் பெர்லின் ஈடுபடுகின்றது என மொஸ்கோ குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மரியா ஜகரோவா அரசின் வெஜ்டா என்ற தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில், 20இற்கும் மேற்பட்ட ஜேர்மனி நாட்டு தூதரகத்தினர் வெளியேறவுள்ளனர் என தெரிவித்துள்ளார்.



## 2ஆம் உலகப்போரின்போது மூழ்கிய கப்பல் கண்டறிவு

சிட்னி, ஏப். 24

1942 ஆம் ஆண்டு 2ஆம் உலக போர் இடம்பெற்றபோது ஜப்பான் நாட்டை சேர்ந்த மான்டிவீடியோ மாரு என்ற பெயரிலான கப்பல் ஆயிரத்துக்கும் மேற்பட்டோருடன் கடலில் பயணம் செய்து கொண்டிருந்தது.

பப்புவா நியூ கினியாவில் வைத்து 850 போர் கைதிகள் மற்றும் பொதுமக்களில் 200 பேரை சிறை பிடித்த ஜப்பானியர்கள் அந்த கப்பலில் பயணித்துள்ளனர்.

அந்த வழியே அமெரிக்காவின் நீர்மூழ்கி கப்பலான யு.எஸ்.எஸ். ஸ்டர்ஜன் வந்துள்ளது. கப்பலில் யார் இருக்கிறார்கள் என்பது தெரியாத சூழலில், அதனை அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் குண்டு வீசி தாக்கி, அழித்தது. பின்னர் அதனை வெற்றியாகவும் கொண்டாடியுள்ளனர்.

இந்த பேரிடரில் 12இற்கும் மேற்பட்ட நாடுகள் பாதிக்கப்பட்டன. டென்மார்க், நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா உட்பட ஜப்பான் நாட்டை சேர்ந்தவர்களும் அதில் இருந்துள்ளனர். இந்த சூழலில், அவுஸ்திரேலிய பாதுகாப்பு துறை, கடல்பகுதி தொல்லியலாளர்கள் மற்றும் பூக்ரோ என்ற டச்சு நாட்டு ஆழ்கடல் ஆய்வு நிறுவனம் இணைந்து கப்பலை தேடும் பணியில் இந்த வார தொடக்கத்தில் ஈடுபட்டது.

பிலிப்பைன்ஸை ஒட்டிய தென்சீன கடல் பகுதியில் அந்த கப்பல் தற்போது கண்பிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய துணை பிரதமர் ரிச்சர்ட் மார்லெஸ் தெரிவிக்கையில், இந்த கப்பலை பற்றிய செய்தியை அறிவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட அவுஸ்திரேலிய குடும்பத்தினர் காத்திருந்தனர்.

80 ஆண்டுகளுக்கு பின்பு, தேடுதல் பணியின் முயற்சியால், இறுதியாக கப்பலின் இருப்பிடம் கண்டறியப்பட்டு உள்ளதற்கு நன்றிகள் என தெரிவித்துள்ளார். (ஐ)

## 10 இலட்சம் இந்தியர்களுக்கு வீசா வழங்குகிறது அமெரிக்கா!



வாஷிங்டன், ஏப். 24

இந்தியர்களுக்கு இந்தாண்டில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட எச்-1பி மற்றும் எல் வீசாக்கள் வழங்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் டொனால்டு லூ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டொனால்டு லூ அளித்த பேட்டியில்,

இந்தியர்களுக்கு இந்த ஆண்டு 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீசாக்களை வழங்கவுள்ளோம். மாணவர்கள் வீசா மற்றும் குடியேற்ற வீசாக்களுடன் இது சாதனை அளவாக இருக்கும். அமெரிக்காவுக்கு படிக்க வரும் வெளிநாட்டு மாணவர்களில் இந்தியா 2ஆவது இடத்தில் உள்ளது. இந்திய மாணவர்களுக்கான அனைத்து வீசாக்களையும் வழங்க அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. பி1 (வர்த்தகம்) மற்றும் பி2 (சுற்றுலா) வீசா பிரிவுகளில் முதல்முறை விண்ணப்பிப்பவர்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவில் பணியாற்றுபவர்களுக்கு எச்-1பி, எல் வீசாக்கள் வழங்குவதில் முன்னுரிமை அளித்து வருகிறோம். இந்த விசாக்களை பெறுவதற்கான காத்திருப்பு காலம் தற்போது 60 நாட்களுக்கு குறைவாக உள்ளது. பணியாளர்களுக்கான வீசா வழங்குவதில் நாங்கள் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறாம்.

இது அமெரிக்க மற்றும் இந்திய பொருளாதாரத்துக்கு மிக முக்கியமானது. தற்காலிக பணியாளர்கள் அமெரிக்காவில் வீசாக்களை புதுப்பிதற்கான பணிகளை நாங்கள் மீண்டும் தொடங்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் அவர்கள் வீசாக்களை புதுப்பிப்பதற்காக வெளிநாடு செல்ல வேண்டியது குறையும் - என்றார். (ஐ)

## காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் அம்ரித் சிங் கைது!

பஞ்சாப், ஏப். 24

பஞ்சாப் பிரிவினைவாத அமைப்பின் தலைவனான அம்ரித் பால் சிங்கை பஞ்சாப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பஞ்சாப்பை பிரித்து 'காலிஸ்தான்' என்ற பெயரில் தனி நாடு உருவாக்கும் நோக்குடன் வெளிநாடுகளில் இருந்து இன்றும் சீக்கியர்கள் பலர் செயல்பட்டு வருகின்றனர். இந்நிலையில் 'வாரிஸ் பஞ்சாப் டி' என்ற அமைப்பின் தலைவரான அம்ரித் பால் சிங், பஞ்சாப்பில் இதற்கான முன்னெடுப்பை தீவிரமாக செயல்படுத்தி வருவதாக புகார் எழுந்தது.

கடந்த பெப்ரவரி மாதம் அம்ரித்பால் சிங் உதவியாளர் ஒருவரை கடத்தல் வழக்கில் அமிர்தசரஸ் பொலிஸார் கைது செய்தனர். இதையடுத்து கத்தி மற்றும் துப்பாக்கி ஏந்திய தனது ஆதரவாளர்களுடன் காவல் நிலையத்தை அம்ரித் பால் சிங் முற்றுகையிட்டார். இதனால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில், அவர்களை தடுக்க முற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட 6 பொலிஸார் காயமடைந்தனர். இதனால், பஞ்சாப்பில் சட்டம் மற்றும் ஒழுங்கில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் தனிப்படை அமைத்து அம்ரித்பால் சிங்கை தேடி வந்தனர்.

இந்த நிலையில், காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பான 'வாரிஸ் பஞ்சாப் டி' அமைப்பின் தலைவர் அம்ரித்பால் சிங்கை பஞ்சாப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். மார்ச் 18-ம் திகதி முதல் தேடப்பட்டு வந்த நிலையில் பஞ்சாப் மாநிலம் மோகாவில் சரணடைந்த அம்ரித் பால் சிங்கை பொலிஸார் கைது செய்துள்ளனர். அம்ரித்பால் சிங் கைதை தொடர்ந்து மாநிலத்தில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அம்ரித்பால் சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது வகுப்புகளுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், கொலை முயற்சி, காவல்துறை அதிகாரிகள் மீது தாக்குதல், அரசு ஊழியர்கள் கடமையை செய்ய இடையூறு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மாலியில் குண்டுவெடிப்பு 9 பேர் பலி: 60 பேர் காயம்!

பமாகோ, ஏப். 24

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சி குழுக்கள் சண்டையிட்டு வருகின்றன.

இந்த நிலையில், அந்நாட்டின் செவரே பகுதியில் மூன்று தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 9 பேர் பலியாகினர். சுமார் 60இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். தாக்குதலில் 20 கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

இதற்கிடையில் வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட 3 வாகனங்கள் இராணுவ டிரோன் துப்பாக்கி சூட்டில் அழிக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## இந்தோனேசியாவில் நிலநடுக்கங்கள் பதிவு

ஜகார்த்தா, ஏப். 24

இந்தோனேசியாவின் கெபுலாவான் பதுவில் நேற்று அதிகாலை இரண்டு முறை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளது. இதன் பின் சில மணி நேரங்களுக்கு பிறகு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவில் 5.8 ஆக பதிவாகியுள்ளது.

இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர். முதல் நிலநடுக்கம் 43 கிலோமீற்றர் ஆழத்திலும் ,2ஆவது நிலநடுக்கம் 40 கிலோமீற்றர் ஆழத்திலும் மையம் கொண்டிருந்ததாக ஐரோப்பிய மத்திய தரைக் கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உடனடியாக வெளியாகவில்லை. (ஐ)

## அமெரிக்க இராஜதந்திரிகள் சூடானிலிருந்து வெளியேறினர்!

வாஷிங்டன், ஏப். 24

சூடான் தலைநகரிலிருந்து அமெரிக்க இராஜதந்திரிகளையும் அவர்களின் குடும்பத்தவர்களையும் பாதுகாப்பாக அமெரிக்க இராணுவம் வெளியேற்றியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இதனை உறுதி செய்துள்ளார். எனது உத்தரவின் பேரில் அமெரிக்க படையினர் அமெரிக்க இராஜதந்திரிகளையும் அவர்களின் குடும்ப த்தவர்களையும் வெளியேற்றுவதற்கான நடவடிக்கை களில் ஈடுபட்டனர் என பைடன் தெரிவித்துள்ளார். சூடான் தலைநகரில் அமெரிக்க தூதரகம் அருகில் மூன்று உலங்குவானூர்திகள் தரையிறங்கி சுமார் 100 பேரை வெளியேற்றியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு





# இறுதி ஓவரில் 4 விக்கெட்கள் குஜராத் ரைட்டன்ஸ் அபாரம்!

அஹமதாபாத், ஏப். 24

கடைசி ஓவரில் 4 விக்கெட்களை வீழ்த்தி த்ரில் வெற்றி பெற்றது குஜராத் ரைட்டன்ஸ் அணி.

நேற்று முன்தினம் நடந்த போட்டியியில் குஜராத் ரைட்டன்ஸ் நிர்ணயித்த136 ஓட்டங்கள் என்ற மொத்த எண்ணிக்கையை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 7 விக்கெட்களை இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 19 ஓவர்கள் நிறைவில் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 3 விக்கெட்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று நல்ல நிலையில் இருந்தது.

அணித் தலைவர் கே.எல். ராகுல் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்ததால் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மோஹித் சர்மா வீசிய கடைசி ஓவரின் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் பந்துகளில் முறையே ராகுல், மார்க்ஸ் ஸ்ரொய்னிஸ், அயுஷ் படோனி, தீப்பக் ஹூடா ஆகிய நால்வரும் ஆட்டம் இழக்க குஜராத் ரைட்டன்ஸின் வெற்றி உறுதியானது.

ராகுல், ஸ்ரொய்னிஸ் ஆகியோரின் விக்கெட்களை மோஹித் சர்மா கைப்பற்றியதுடன் மற்றைய இருவர் ரன் அவுட் முறையில் ஆட்டம் இழந்தனர்.

லக்னோ சார்பாக கைல் மேயர்ஸுடன் ஆரம்ப விக்கெட்டுக்காக 55 ஓட்டங்களையும் குர்ணல் பாண்ட்யாவுடன் 2ஆவது விக்கெட்டில் 51 ஓட்டங்களையும் ராகுல் பகிர்ந்தார். ஆனால், அதன் பின்னர் 22 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்கள் சரிந்தன.

ராகுல் 68 ஓட்டங்களையும் கைல் மேயர்ஸ் 24 ஓட்டங்களையும் குர்ணல் பாண்டியா 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மோஹித் சர்மா, நூர் அஹ்மத் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

ஷுப்மான் கில் 2ஆவது ஓவரில் ஓட்டம் பெறாமல் ஆட்டம் இழந்த போதிலும் ரிதிமான் சஹாவும் அணித் தலைவர் கார்திக் பாண்ட்யாவும் 2ஆவது விக்கெட்டில் 68 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகத்தைக் கொடுத்தனர்.

ரிதிமான் சஹா 47 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்த போது மொத்த எண்ணிக்கை 72 ஓட்டங்களாக இருந்தது.

தொடர்ந்து அபிநவ் மனோகர் (3), விஜய் ஷன்கர் (10) ஆகிய இருவரும் ஆட்டம் இழக்க 15 ஓவர்கள் நிறைவில் குஜராத் ரைட்டன்ஸின் மொத்த எண்ணிக்கை 93 ஓட்டங்களாக இருந்தது.

கார்திக் பாண்ட்யாவும் டேவிட் மில்லரும் 5ஆவது விக்கெட்டில் 26 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு நல்ல நிலையில் இட்டனர். இந்த இணைப்பாட்டத்தில் பாண்ட்யாவின் பங்களிப்பு 35 ஓட்டங்களாகும்.

பாண்ட்யா 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் குர்ணல் பாண்ட்யா ஸ்ரொய்னிஸ் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது பஞ்சாப் கிங்ஸ்!



மும்பை, ஏப். 24

கடைசி ஓவரில் அபாரமாக செயல்பட்ட பஞ்சாப் கிங்ஸ் அணி 13 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸ் அணியை வெற்றி கொண்டது.

16ஆவது ஐ. பி. எல். தொடர் தற்போது நடக்கிறது. இதில், நேற்றுமுன்தினம் நடந்த போட்டி ஒன்றில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து, 214 ஓட்டங்களைக் குவித்தது.

9.4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து, 84 ஓட்டங்களை பெற்றிருந்த பஞ்சாப் கிங்ஸ் 14 ஓவர்கள் நிறைவில் மேலதிகமாக விக்கெட்டை இழக்காமல் 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. ஆனால், ஹர்ப்ரீத் சிங் பாட்டியா, பதில் அணித் தலைவர் சாம் கரன், ஜிதேஷ் சர்மா ஆகியோரின் அதிரடியால் கடைசி 6 ஓவர்களில் 109 ஓட்டங்களை குவித்த பஞ்சாப் கிங்ஸ் 214 ஓட்டங்களைக் குவித்தது. இதில், ஹர்ப்ரீத் சிங் 28 பந்துகளில் 41 ஓட்டங்களையும், சாம் கரன் 29 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜிதேஷ் சர்மா 7 பந்துகளில் 4 சிக்ஸர்களுடன் 25 ஓட்டங்களை விளாசினார்.

பந்துவீச்சில் பியூஸ் சாவ்லா, கமரூன் க்றீன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது மும்பை இந்தியன்ஸ்.

தொடக்கம் கொடுத்த இஷான் கிஷன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தபோதிலும், ரோஹித் ஷர்மா, கமரூன் கிறீன், சூரியகுமார் யாதவ் ஆகியோரின் அதிரடிகளின் உதவியுடன் மும்பை இந்தியன்ஸ் 14 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து, 132 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் இருந்தது.

ஆனால், கடைசி 6 ஓவர்களில் 69 ஓட்டங்களை மாத்திரமே மும்பை இந்தியன்ஸால் பெற முடிந்தது.

ரோஹித் ஷர்மா 27 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

கமரூன் கிறீன் 43 பந்துகளில் 67 ஓட்டங்களைக் குவித்தார். சூரியகுமார் யாதவ் 26 பந்துகளில் 57 ஓட்டங்களை பெற்றிருந்தபோது மொத்த எண்ணிக்கை 17.3 ஓவர்களில் 182 ஓட்டங்களாக இருந்தது. ஆனால், அடுத்த பந்தில் சூரியகுமார் யாதவின் விக்கெட்டை அர்ஷ்தீப் சிங் வீழ்த்தியதும் ஆட்டத்தில் திருப்புமுனை ஏற்பட்டது.

கடைசி ஓவரிலும் அர்ஷ்தீப் சிங் அடுத்தடுத்த பந்துகளில் திலக் வர்மா, நெஹால் வதீரா ஆகியோரின் விக்கெட்களை வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸின் வெற்றியை உறுதிசெய்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற மும்பை 13 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ரிம் டேவிட் 13 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் அர்ஷ்தீப் சிங் 4 விக்கெட்களை கைப்பற்றினார். (ஐ)

# சச்சினின் 50ஆவது பிறந்தநாள் வான்கடேயில் கொண்டாட்டம்!

மும்பை, ஏப். 24

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் இன்று (ஏப்ரல் 24) தனது 50-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இந்த நிலையில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது வான்கடே மைதானத்தில் மும்பை அணியினர் மற்றும் ரசிகர்கள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தார்.

வான்கடேவில் குழுமியிருந்த ரசிகர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்க அந்த வாழ்த்து மழைக்கு நடுவே தனது பிறந்தநாளை சச்சின் கொண்டாடினார்.




இந்திய அணிக்காக 664 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சச்சின் விளையாடியுள்ளார். டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது - 20 போட்டிகள் இதில் அடங்கும். 34,357 ஓட்டங்கள் மற்றும் 201 விக்கெட்களை சச்சின் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

*ஊவா, சப்ரகமுவா மருத்துமவனைகளில்*

# ஆன்ஜியோகிராம் கருவி இல்லாததால் உயிரிழப்போரின் தொகை அதிகரிப்பு!

பதுளை, ஏப். 24

**ஊவா மற்றும் சப்ரகமுவா மாகாணத்தின் எந்த அரச மருத்துவமனைகளிலும் இதய நோய்கள் தொடர்பாக பரிசோதனை செய்யும் ஆன்ஜியோகிராம் கருவிகள் இல்லாததால், இதயம் தொடர்பான பாதிப்பை எதிர்நோக்கியுள்ள பல நோயாளர்கள் உயிரிழக்கின்றனர் என்று பதுளை பொது மருத்துவமனையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதயத்துக்கு செல்லும் இரத்த ஓட்டத்தில் தடை இருக்கிறதா என்பதை அறிந்து, இரத்த நாளங்களை எக்ஸ்ரே படங்களின் மூலம் கண்டறிவதற்கு ஆன்ஜியோகிராம் கருவியை கொண்டு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

இந்தப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன சிகிச்சை அளிக்க வேண்டும் என முடிவு செய்யப்படுகின்றது. ஆனால், பெருந்தோட்ட மற்றும் கிராமபுற மக்கள் பரந்து வாழும் ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள அரச மருத்துவமனைகளில் இந்த கருவிகள் இல்லை.

நாட்டில் 42 அரச மருத்துவமனைகளில் மாத்திரமே இக்கருவிகள் இருக்கின்றன. இக்கருவியினூடாக செய்யப்படும் பரிசோதனைக்காக நோயாளர்கள் கண்டி அல்லது கொழும்புக்குச் செல்கின்றனர். அவர்கள் காத்திருப்புப் பட்டியலில் உள்வாங்கப்பட்டு திகதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால், அந்த காலம் வருவதற்கு முன்பாகவே அந்த நோயாளர்களில் பலர் உயிரிழக்கின்றனர்.

கடந்த வாரம் பதுளை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகை தந்து, திகதி வழங்கப்பட்ட 36 வயது இளைஞரொருவர் உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இந்தப் பரிசோதனைகளை தனியார் மருத்துவமனைகளில் செய்வதாயின், ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக செலவிட வேண்டியிருக்கிறது.

சப்ரகமுவா மாகாணத்தில் உள்ளவர்கள் அருகில் உள்ள கண்டி மற்றும் கொழும்பு மருத்துவமனைகளுக்கு செல்லலாம். ஆனால், ஊவா மாகாணம் அப்படியல்ல. நோயை சுமந்து கொண்டு நோயாளர்களால் அவ்வளவு தூரம் பயணிக்க முடியாது.

சுமார் 14 இலட்சம் சனத்தொகை கொண்ட இந்த மாகாணத்தில் உள்ள அரச மருத்துவமனைகளில் ஏதாவதொரு மருத்துவமனைக்கு இக்கருவி மிக மிக அவசரத் தேவையாக உள்ளது.

அன்ஜியோகிராம் கருவியின் விலை சுமார் 25 கோடியாகும். அக்கருவியை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லாவிடினும், எமக்கு அனுமதி அளித்தால், நாம் தனவந்தர்களிடமும் ஏனையோரிடமும் நிதி திரட்டி, இக்கருவியை கொள்வனவு செய்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

இந்த கருவிகள் இருந்தால் வருடந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களை எம்மால் காப்பாற்ற முடியும். ஆகவே, அரசாங்கமும் உரிய தரப்பினரும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# மரதன் ஓடியோருக்கு உதவ ஓடிய சிறுவன் உயிரிழந்தார்

கொழும்பு, ஏப். 24

மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு உதவியாக ஓடிய சிறுவன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் - கல்கிரியாகம பொலிஸ் பிரிவில் பலாகல, குடாஹெட்டியாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மரதன் ஓட்டப் போட்டி நடந்தது.

இதன்போது மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களின் உதவிக்காக ஓடிக்கொண்டிருந்த சிறுவன் திடீரென வீதியில் விழுந்தையடுத்து, அவர் கலாவெள பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

முதலுதவி அளிக்கப்பட்டு, அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு அவர் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். இந்நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுவன் 10 வயதுடைய, பலாகல - குடா ஹெட்டியாவ பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார்.

இந்த சிறுவனின் சகோதரன் மற்றும் நண்பர்கள் மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்றிருந்தனர். அவர்களுக்கு உதவிக்காக இவரும் போட்டியாளர்களுடன் ஓடியுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# சஜித்துக்கு பிரதமர் பதவியை வழங்கும் தேவை எதுவுமில்லை!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஏப். 24

அரசமைப்புக்கு அமைய ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் மாற்றம் ஏற்படாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டிய தேவை ஏதும் கிடையாது. நெருக்கடியான சூழலில் தலைமைத்துவத்தை ஏற்கும் தைரியம் அவருக்கு கிடையாது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடுவலை பகுதியில் நேற்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் நடத்திய கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தவறான செய்திகள் வெளியாகியுள்ளன. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவை பிரதமராக நாமே தெரிவு செய்தோம். ஆகவே, பிரதமர் பதவியில்



மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவை ஏதும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை தெரிவுசெய்ய சிறீ லங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரசமைப்புக்கு அமைய ஆட்சிமாற்றம் ஏற்படும் வரை ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் மாற்றம் ஏற்படாது.

தேசிய அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியை வழங்கவேண்டிய தேவை ஏதும் கிடையாது. நெருக்கடியான சூழலில் தலைமைத்துவத்தை ஏற்கும் தைரியம் எதிர்க்கட்சித் தலைவருக்கு கிடையாது. பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தபோது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவரிடம் பல முறை கோரிக்கை விடுத்தார்.

ஆசை ஆனால், அச்சம் என்பதால் அரசாங்கத்தை அவர் பொறுப்பேற்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறுகிய காலத்துக்குள் நாட்டை வழமைக்கு கொண்டு வந்துள்ளார். ஆகவே, ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய தேவை ஏதும் கிடையாது. எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கூட்டணியாக போட்டியிட எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# ஓடிக்கொண்டிருந்த ரயிலில் 'செல்பி' தவறிவிழுந்து சிறுவன் படுகாயம்!

பதுளை, ஏப். 24

பதுளை சென்ற ரயிலில் சுய படம் (செல்பி) எடுக்க முயன்ற சிறுவன் தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை - தியத்தலாவ ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன், ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய பகுதிகளுக்கு இடையில் ரயிலில் இருந்து தவறி விழுந்தார் என்று புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்த சிறுவன் அதே ரயிலில் அப்புத்தளை புகையிரத நிலையத்திற்கு அழைத்துச் சென்று அம்புலன்ஸ் மூலம் தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பால்புதுமையினர் தொடர்பான பிரேரணைக்கு ஆதரவளியுங்கள்

## மனித உரிமை செயல்பாட்டாளர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்!

"பால்புதுமையினர் (மாற்றுப் பாலினத்தவர், ஒரு பாலின மற்றும் இருபாலின ஈர்ப்பாளர்கள் உள்ளிட்டோர்) தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை அனைத்து இலங்கையர்களுக்குமான உண்மையான சமத்துவத்தையும், நீதியையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்திய மிக முக்கிய நடவடிக்கையாகும்", என்று ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் அந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் 106 பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பால்புதுமையினர் தொடர்பில் குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையில் திருத்தங்களை மேற்கொள்வது பற்றி பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணையை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம்.

பெண்கள், சிறுவர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினராகிய நாம், இந்தத் தனிநபர் பிரேரணையானது இலங்கையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதை முன்னிறுத்திய முதல்படி என்றே கருதுகின்றோம்.

இப்பிரேரணையானது சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தைக் குற்றமற்றதாக்குகின்றது என்பது உள்ளடங்கலாக இப்பிரேரணை தொடர்பில் பரப்பப்பட்டுவரும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்களைக் குற்றமாக்குவதற்கு அவசியமான அனைத்துக் காரணிகளும் தற்போது நடைமுறையிலுள்ள குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அவை நீக்கப்படவோ அல்லது திருத்தியமைக்கப்படவோ இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே, பால்புதுமையினர் சமூகத்தைத் தவறாகச் சித்தரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளும், அவர்கள் மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்களும் நீண்டகாலமாக இலங்கையின் கல்வி, கலாசாரம், பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச்செய்த சமூகத்தை மிகுந்த துயரத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பால்புதுமையினர் சமூகத்தினர் அவமதிப்புக்கும், சித்திரவதை, கட்டாய பரிசோதனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்குரிய வேலைவாய்ப்பு, வீடமைப்பு வசதி, சுகாதாரசேவை என்பன மறுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 'இலங்கையர்' என்ற தமது அடையாளத்தை முழுமையாக அனுபவிப்பதற்கும், தமது அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பால்புதுமையினர் சமூகத்தினர் கொண்டிருக்கும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்தவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையானது அனைத்து இலங்கையர்களுக்குமான உண்மையான சமத்துவத்தையும், நீதியையும் உறுதிப்படுத்துவதை முன்னிறுத்திய மிகமுக்கிய நடவடிக்கையாகும். எனவே இப்பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## பணம், நகைக்...

சந்தேகநபரை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், "அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள், சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்" என்று சந்தேகநபர் கூறினாரென பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட இந்த விசாரணையில், அப்பகுதியில் நடமாடியவர் என்று கூறப்படும் சந்தேக நபர் புங்குடுதீவில் இருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் இரவே அங்கு சென்ற பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

கைதானவர், ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கில் கைதாகி நாடு கடத்தப்பட்ட 51 வயது நபர் என்று கூறப்படுகின்றது. அத்துடன், அவரிடமிருந்து தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டன. விசாரணையில் தானே கொலை செய்தார் என்று சந்தேகநபர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், "நான் நெடுந்தீவு வந்தால் வயோதிபர்கள் வசித்த வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரின் நகைகளையும் அபகரித்து, விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்ட மிட்டேன்.

அதனால் நேற்று அதிகாலை 4.30 பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன். நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்" என்று சந்தேக நபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, கொலை சந்தேகநபர் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் அவரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதிவான் அனுமதியளித்தார். (ஐ-03)

## தௌஹீத்...

போதிலும், பதிலளிக்கப்படாத நான்கு கேள்விகள் எஞ்சியுள்ளன. இலங்கை இராணுவ உளவுத்துறை தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு உணவளித்தது என்ற குற்றச்சாட்டுகளுக்கு இன்னும் பதில் அளிக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்த அமைப்பு ஏன் தேர்தலில் ஆதரவளித்திருந்தது?" என்று கேள்வி எழுப்பிய சம்பிக்க ரணவக்க, இந்த தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்பதில் தனக்கு நம்பிக்கை இல்லை - என்றும் கூறினார். (ஐ)

## நான்கு...

ளுக்கு 3 முன் னாள் அமைச்சர்கள் நியமிக்கப்பட வுள்ளனர். அவர்களின் பெயர்கள் ஜனாதி பதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என் றும் தெரிய வருகின்றது. (ஐ)

## ஜனாதிபதி...

உத்தேச பயங்கரவாத சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தே நீதி அமைச்சர் ஜனாதிபதியுடன் உரையாடவுள்ளார். எனினும், எத்தகைய மாற்றங்கள் செய்யப்படலாம் என்பது குறித்து வெளிவிவகார அமைச்சர் தகவல் எதையும் வெளிப்படுத்தவில்லை.

எனினும், பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும் அனைத்து கரிசனைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறினார். (ஐ)

## 6 சுயாதீன...

பிரேமதாஸ அரச மைப்புச் சபைக்கு முன்மொழிந்துள்ளார்.

நாட்டுக்கு தெரிவிக்கப்பட்டபடி, பொதுச் சேவை ஆணைக்குழு ஏற்கனவே தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவை நியமித்துள்ளது.

இந்நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்வனவு ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு என்பவற்றுக்கே உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்காக அரசமைப்பு பேரவை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் கூடவுள்ளது. (ஐ - சி)

## கலாசார...

விதமான கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன. அத்துடன், மாதா சிலையை யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை எதிர்வரும் மே முதலாம் திகதி திறந்து வைக்கவுள்ளார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் ஆயர் இல்லத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தத் தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று குரு முதல்வர் பி. ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார். (ஐ)

## நலன்புரி...

ஆரம்பமாகவுள்ளது.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு, தேசிய கொள்கைகள் அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

வறுமை கோட்டுக்கு கீழுள்ளோர் உள்ளடங்கலாக நான்கு பிரிவுகளின் கீழ் இந்த நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய, பாதிப்புக்கு உள்ளானோருக்கான பிரிவில் 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 2,500 ரூபாய் கொடுப்பனவு ஜூலை முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

குறிப்பிடத்தக்க அளவு பாதிப்புக்கு இலக்கானோர் பிரிவில் 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

வறியோருக்கான பிரிவில் 8 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 8 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 3 வருடங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மிகவும் வறுமைப்பட்ட 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 ஆயிரம் ரூபாய் வீதம் 3 வருடங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், உதவி பெறுகின்ற மாற்றுத் திறனாளிகள், சிறுநீரக கொடுப்பனவு பெறுவோர் ஆகியோருக்கு மாதாந்தம் மேலதிகமாக 5 ஆயிரம் ரூபாயும், முதியோருக்கான கொடுப்பனவாக மாதாந்தம் மேலதிகமாக 2 ,000 ரூபாயும் வழங்கப்படவுள்ளன.

இந்த நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 37 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

போராட்ட கூடாரத்தில் இருந்த

# யுவதிகள் குழந்தைகளை பெற்று வீதியில் விட்டுச் செல்கின்றனர்!

### அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 24

கடந்த வருடம் நடைபெற்ற காலி முகத்திடல் போராட்டத்தின் கூடாரங்களில் இருந்த யுவதிகள் பிள்ளைகளைப் பெற்று வீதியில் விட்டுச் செல்கின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிலர் மனநோயாளிகள் எனவும் ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் நடந்த உரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைதியான போராளிகளை வீதிக்கு வர அனுமதித்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவும் வழங்கினார். இப்போதும் கொடுத்திருக்கிறோம். போராட்டம் என்ற போர்வையில் பயங்கரவாத செயல்கள் நடத்தப்பட்டால் அது குறித்து அரசு கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால், நாட்டு மக்கள் வாழ முடியாது. போராட்டத்தில் கலந்து கொண்ட மன உளைச்சலுக்கு ஆளானவர்கள் விஷம் குடிப்பதைப் பார்க்கிறோம். கூடாரங்களில் வசித்தவர்கள் குழந்தைகளைப் பெற்று தெருவில் விட்டு விட்டனர். நாட்டில் அப்படித்தான் நடந்தது. இன்று மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பொலிஸார் ...

முறையில் டிப்பர் வாகனத்தை வாங்கியுள்ளார். அவரது வாகனம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கோப்பாய் சந்தியில் சமிக்ஞை பகுதியில் தரித்து நின்றபோது, நால்வர் தம்மை பொலிஸார் என்று அடையாளப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், லீசிங் பணத்தை கட்டவில்லை என்று கூறி வாகனத்தையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அத்துடன், டிப்பர் வாகனத்தில் தனது கைபேசி, 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவும் இருந்தன என்றும் முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தனர். அவர் நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர் என்று அறிய வருகிறது.

கைதானவர் மீது சட்டத்துக்கு புறம்பாக வாகனத்தை பறிமுதல் செய்தமை, வாகனத்துக்குள் இருந்த பணம், கைபேசியை கொள்ளையிட்டமை மற்றும் பொலிஸார் என மோசடியாக தம்மை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஐ-03)

## உயிர்த்த ஞாயிறு...

தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை கைது செய்வதற்கான அரசியல் செயல்பாடுகளில் பேராயர் தலையிடுவது பெரும் பிரச்னைகளை தோற்றுவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ என்போர் இவ்விவகாரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கமாட்டார்கள் எனக் கூறிய அவர், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அந்த பட்டியலில் இணைத்துள்ளார். அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக செயல்படாமல் உண்மையை கண்டறிவதற்காகவே நாம் செயல்பட வேண்டும். அதனை விடுத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவோ ஜனாதிபதிகளை தெரிவுசெய்ய முயற்சிப்பதோ பொருத்தமற்றது.

தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தமது ஆட்சியில் தண்டனை வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறிக்கொண்டிருக்கின்றார். எதிர்பாராத விதமாக அவர் அடுத்த ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு அவராலும் பிரதான சூத்திரதாரிகள் இனங்காணப்படாவிட்டால் பேராயர் அவருக்கு எதிராகவும் செயல்படுவார்.

இவற்றை தவிர்த்து பொலிஸார், இரகசிய பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (ஐ)

## பயங்கரவாத...

படுத்தப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மக்களின் உரிமைகள், சுதந்திரம், ஜனநாயகத்தை கட்டுப்படுத்தும் விதிகள் ஏதேனும் இருந்தால் அவற்றை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது. அது மட்டுமின்றி, நான் பாராளுமன்றில் சட்டமூலத்தை சமர்ப்பித்தவுடன் எந்தவொரு குடிமகனும் அரசியல் கட்சியும் அல்லது அமைப்பும் இதனை உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதேசமயம், பாராளுமன்றத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை முதல் வாசிப்புக்காக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகக் கூறினார். ஊழலுக்கு எதிரான சட்டமூலம் மே மாதம் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறினார். (ஐ)

## இந்தியாவின்...

பிரதமர்,

சீதையம்மன் ஆலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தியான மண்டபத்திற்கும் இந்திய மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அதற்குக் காரணம் அதற்கான நிதியை வழங்குகின்றவர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள். இது ஒரு புறம் எங்களுடைய நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இருக்கின்ற கலை, கலாசார ரீதியான ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. எங்கள் இரு நாடுகளுக்குமான உறவு பல தசாப்தங்களை கடந்து செல்கின்றது.

இந்தியாவின் இமயமலையின் பல பகுதிகளிலும் தியான மண்டபங்களும் அதற்கான சூழலும் அமைந்திருக்கின்றது. அதே போல இன்று இலங்கையின் உயரமான மலையான பீதுருதாலகால மலையின் அடிவாரத்தில் சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்படுகின்றது.

இலங்கை நாடானது இன்று முன்னோக்கி செல்கிறது என்றால் அதற்கு இந்தியா எங்களுக்கு செய்த உதவிகள் முக்கிய காரணமாக அமைந்துள்ளன. எங்களுடைய நாடு எதிர்நோக்கிய பொருளாதார பின்னடைவின்போது இந்தியாவின் உதவியானது நாம் மீண்டும் எழுந்து முன்னோக்கி நடப்பதற்கான அடித்தளத்தை வகுத்துள்ளது.

மதங்களுக்கு இடையிலான நெருங்கிய புரிந்துணர்வும் எமது பொருளாதார பின்னடைவின்போது எமக்கு பல உதவிகளை பெற்றுக் கொள்ள வழிவகுத்தது.

புத்தரின் போதனைகள் எம்மை நல்வழிப்படுத்துவதற்கு ஒரு தலமாக அமைந்திருக்கின்றது. அதனை நாம் அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும். இன்று நாம் அனைத்து மதங்களுக்கும் அவர்களுக்கான முக்கியத்துவத்தை கொடுத்து வருகின்றோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஹர்த்தால் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவளியுங்கள்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னாரில் நேற்று கோரிக்கை!

மன்னார், ஏப். 24

**வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் நாளை செவ்வாய்க் கிழமை பொது நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு மன்னாரில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டாகக் கோரிக்கை விடுத்தது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகியவை இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்தனர்.

இதில், அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

"வடக்கு கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவ மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இந்த நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கமானது எமது மக்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஏற்கனவே, அடக்குமுறைக்கு உள்ளாக்கி இருக்கின்ற எமது மக்களை மீண்டும் மீண்டும் அடக்கி ஆள்வதற்கான புதிய சட்டத்தை உருவாக்குகின்றது.

இதற்கு எதிராக நாங்கள் அனைவரும் கிளர்ந்து எழுந்து இந்த சட்டத்தை இந்த நாட்டிலிருந்து துடைத்து எடுப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

இந்த சட்டமானது தமிழர்களுக்கு மட்டும் பாதிப்பு இல்லை. முஸ்லிம் மற்றும் சிங்கள இளைஞர், யுவதிகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே இந்த விடயத்தில் முஸ்லிம், சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கட்டாயம் எதிர்க்க வேண்டும். இதேநேரம் நாளை நடக்கும் முழு அடைப்பு போராட்டத்துக்கும் ஆதரவளிக்க வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# இலங்கைக்கு தொடர்ந்தும் சீனா ஒத்துழைப்பு வழங்கும்!

## ஜனாதிபதிக்கு சீனக் குழு உறுதி

கொழும்பு, ஏப். 24

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதுடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கப்படும் என சீனா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளது.

சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமத்தின் தலைவர் மியாவ் ஜியான்மின் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தனர். இதன் போதே ஜனாதிபதியிடம் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த சந்திப்பின் போது பல முக்கிய முதலீட்டு முன்மொழிவுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இலங்கையில் தனியொரு பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர் என்ற வகையில், சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம் ஏற்கனவே 200 கோடி டொலர்களை முதலீடு செய்துள்ளதாக சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கை ஓரளவுக்கு மீண்டுள்ளதன் பின்னர் மேற்கொள்ளப்படும் முதலாவது நேரடி வெளிநாட்டு முதலீட்டு திட்டமாக தெற்காசிய வர்த்தக மற்றும் தளபாடமையத்தை கூட்டாக கட்டமைக்க சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம், இலங்கை துறைமுக அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுற்றுலாத்துறை பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 24

சுற்றுலாத்துறை, ஹோட்டல்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு துறைசார் உயர் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தில் சனிக்கிழமை இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன் போது இனிவரும் காலங்களில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுடன் சுற்றுலா ஹோட்டல்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்னைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கான தீர்வுகளை வழங்குமாறும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

# 'மாவா' போதையூட்டும் பாக்கை மாணவர்களுக்கு விற்றவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

ஊரெழு மற்றும் உரும்பிராய் பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மாவா போதை பாக்கை விற்பனை செய்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 250 மாவா போதை பாக்கு பக்கெற்றுக்கள் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரெழுவைச் சேர்ந்த 23 வயது இளைஞரே நேற்றைய தினம் கைது செய்யப்பட்டார்.

இதே குற்றச்சாட்டில் சந்தேகநபரின் உறவினர்கள் முன்னர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உள்படுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சுதந்திர கட்சியிலிருந்து பிரிந்தோரை மீளவும் சேர்க்கும் முயற்சி தோல்வி!

கொழும்பு, ஏப். 24

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட எம். பிக்கள் குழுவை மீண்டும் இணைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 14 பாராளுமன்ற உறுப்பினர்களில் 8 பேர் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை வகிக்கின்றனர். அவர்களை மீண்டும் கட்சிக்கு அழைத்து வருவதற்கான கலந்துரையாடல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. .

அரசாங்கத்தின் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளை வகிக்கும் நிமால் சிறிபால டி சில்வா, லசந்த அழகிய வண்ண, ஜெகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் தயாசிறி ஜயசேகர, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஷான் விஜயலால் டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர்கள் துஷ்மந்த மித்ரபால, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்றும் அவர்களை மீண்டும் பதவியில் அமர்த்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தில் பதவிகளை வகித்துக்கொண்டு கட்சியின் கொள்கைக்கு எதிராக செயல்படுவதால் அரசாங்கத்தில் இருக்கும்போது மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ள முடியாது எனக் கூறப்பட்டதாக அறிய வருகின்றது.

இந்த நிலையில் அவர்களை மீண்டும் கட்சிக்கு அழைத்து வருவதற்கான பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளதாக அறியமுடிகின்றது. (ஐ)

# காணி மோசடி குற்றச்சாட்டில் முன்னாள் தவிசாளர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 24

தீவகத்தில் முறையற்ற வகையில் பரம்பரை காணியை மோசடியான முறையில் தனது பெயருக்கு உரிமம் மாற்றிய குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நல்லதம்பி சசிகரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரின் மோசடிக்கு துணை நின்றனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளர் உள்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 சகோதரர்கள் இடையே பாகப் பிரிவினை செய்யப்பட்ட வேண்டிய ஆதனத்தை அவர்களில் ஒருவர் மட்டும் முறையற்ற வகையில் தனது பெயருக்கு மாற்றியமைக்காகவே நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் கைது செய்ய பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது.

வெளிநாட்டில் வசிக்கும் அவரின் சகோதரரின் பங்கு ஆதனம் சட்டத்துக்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் கைதானவரின் சகோதரர் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் மாவட்ட விசேட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை மேற்கொண்டு இந்தக் கைதை மேற்கொண்டனர்.

அவரின் மோசடியாக முடிக்கப்பட்ட உறுதிக்கு சாட்சிக் கையொப்பமிட்ட முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் இன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# கோட்டாபய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை!

கொழும்பு, ஏப். 24

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு வருடங்கள் சென்றிருந்தாலும் அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருப்பவர்கள் இன்னும் வெளிக் கொணரப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.